# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு


“சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது” (எபே. 1:10)


பாரம்பரிய கத்தோலிக்க இதழ் ஜுலை - ஆகஸ்ட் 2012




குடும்ப ஆண்டு சிறப்பிதழ்

**தேவதாயின் ஆரோபணத் திருநாள்** | **இல்லறத்தின் விளக்கம்** | **அர்ச். பத்தாம் பத்திநாதர் ஜீவிய சரிதை**

# Sancta Maria

மலர்: 4 இதழ்: 4
ஜூலை - ஆகஸ்ட் 2012

வெளியிடுவோர்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை
ஆசிரியர்: சங். திரேஷியன் பாபு

"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக, முடிந்த வரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடம் உள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியம் ஆகும்." — பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்



திருக்குடும்பத்தை
உத்தம ஞானத்தோடு
நடத்திவந்த
அர்ச். சூசையப்பரே,
எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும் !

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
St. Pius X Society, 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002
Ph: 0462 - 2586201; 2572389 e-mail: sspxindia@gmail.com

15.06.2012

சேசுவின் திரு இருதய திருநாள்

அன்பார்ந்த வாசகர்களே,

தன்னுடைய முப்பதாவது வயதில் சேசுநாதர் தம்முடைய பொதுவாழ்க்கையை தொடங்க சித்தமானார். அதற்காக அவர் முதலில் யோர்தான் நதிக்கரைக்கு சென்று அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்த அர்ச். ஸ்நாபக அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றார். பின்னர் வனாந்தரமான இடத்தில் ஒதுங்கி நாற்பது நாட்கள் "அவர் ஒன்றும் புசியாமல் இருந்து" (மாற்கு. 4:2) ஜெபத்தில் செலவழித்தார். பின்னர் கலிலேயா நாட்டிலுள்ள கானாவூருக்கு சென்றிருந்தார். அங்கே நடைபெற்ற கலியாணத்திற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

நாம் ஏற்கனவே அறிந்த இவ்வரலாற்று நிகழ்ச்சியை தியானித்து பார்க்கும்போது சிறிது தயக்கம் கொள்கிறோம். சேசுநாதர் ஏன் திருமணத்திற்கு செல்கிறார்? அப்படி செல்வது அவருக்கு உகந்ததா? என்று கேள்வி கேட்டுக்கொள்கிறோம். அதற்கான பதில் சுவிசேஷத்தில் அடங்கியுள்ளது. அவர் எதற்காக சென்றார்? ஏனென்றால் "அவர் அந்த கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்" (அரு. 2:2). இதுவரை வெறும் சமுதாய சடங்காக இருந்துவந்த கலியாணத்தை "மெய்விவாகம்" என்ற தேவதிரவிய அநுமானமாக உயர்த்தினார். சேசுநாதரின் பிரசன்னம் இருக்கும் எல்லா திருமணங்களும் (அவர் அழைக்கப்பட்ட எல்லா திருமணங்களும்) உண்மையில் இந்த மகத்தான நிலையை அடைகிறது. மெய்யான தேவதிரவிய அநுமானமாய் - வரப்பிரசாதம் பொழியும் ஓர் வாய்க்காலாய் மாறுகிறது. தங்களுடைய திருமண வாழ்வின் மூலம் அதில் இணைக்கப்பட்ட கத்தோலிக்க தம்பதியர்களும், அவர்களுடைய குழந்தைகளும் மோட்சம் போகத் தேவையான எல்லா வரப்பிரசாதங்களும் அத் தேவதிரவிய அநுமானத்திலிருந்து தரப்படுகிறது. அதுமட்டுமல்ல, இவ்வுலகில் ஏற்படும் எல்லா சிக்கல்களையும் எதிர்கொள்ளவும், தங்களுடைய திருமண ஒற்றுமையை பாதுகாக்கவும் இவர்களுக்கு தேவையான வரப்பிரசாதங்கள் இங்கே அருளப்படுகிறது. ***இத்தகைய கிறீஸ்தவ திருமணங்களுக்கு நிகர் எதுவும் இல்லை.*** எத்தனை கிறீஸ்தவ குடும்பங்களில் துன்பங்கள் என்ற தண்ணீர் ஜாடிகள் ஆறுதல்கள் என்ற இரசமாய் மாறுவதை இன்றும் காண்கிறோம். சேசுநாதர் அங்கே இருக்கும்வரை 'நல்ல இரசத்திற்கு' குறைவு இராது.

அங்கே வேறு எந்த குறையும் இருக்காது என்று கூறவில்லை மாறாக எந்த குறையையும் நாம் சேசுநாதரிடம் எடுத்துச் சென்றால் அதற்கு தீர்வு நாம் எதிர்பார்த்ததைவிட சிறப்பானதாய் அமையும். அதற்கு சேசுநாதர் அங்கே அழைக்கப்பட்டிருப்பது அவசியமல்லவா? எவ்வளவு அரிதான பொக்கிஷம்! எவ்வளவு அழகான ஆறுதல்!! ஆழமான உண்மை!!

தற்கால சூழலில் இத்தகைய திருமண ஒற்றுமை அரிதாகிக்கொண்டிருக்கிறது. குடும்பங்களிடையே பிளவு!! கணவன் - மனைவி பிரிவு! விவாகரத்து!! இப்படிப்பட்ட அலங்கோலங்கள் கத்தோலிக்க குடும்பங்களுக்குள்ளும் அதிகமாகி விட்டது. பிரியம் இல்லை எனவே பிரிகிறோம் என்ற நாச கொள்கை கத்தோலிக்க இல்லத்தினுள்ளும் கேட்கப்படுவது அதிர்ச்சியை அல்லவா அளிக்கிறது.

ஏன் இந்த சரிவு? ஒரேயொரு காரணம் சேசுநாதர் இத்தகைய திருமணத்திற்கு அழைக்கப்படுவதில்லை. கத்தோலிக்க திருமணங்கள் (மெய்விவாகம்) உண்மையில் ஒரு தேவதிரவிய அநுமானம் என்றும் அதற்கு உகந்த முறையில் நம் குழந்தைகளை சரியான முறையில் தயார் செய்யாத பெற்றோர்களே இச்சரிவுக்கு பெருமளவு பொறுப்பு ஏற்கிறார்கள். குழந்தைகளை புண்ணியத்தில் வளர்ப்பதுதான் பெற்றோர்களின் முதல் கடமை. அவர்கள் அங்கே தவறினால் மீண்டும் அக்குழந்தைகளை சரியான பாதைக்கு கொண்டுவருவது எளிதான காரியம் அல்ல!!

இத்தகைய முக்கியமான கடமைகளில் உங்களுக்கு உதவும் வகையில் சில கட்டுரைகளை நம் ***சாங்க்தா மரியா*** இதழில் தேர்ந்தெடுத்துள்ளோம். ***இதை தயவுசெய்து பொறுமையாக வாசியுங்கள், தியானியுங்கள், ஆத்தும சோதனை செய்து பாருங்கள்.*** முக்கியமாக ஜெபியுங்கள். 'கூடி ஜெபிக்கும் குடும்பம் கூடி வாழும்' என்பது காலத்தால் நிரூபிக்கப்பட்ட விதி. இதை மாற்ற முடியாது.

***இறுதியாக, ஜெபமாலைப் போருக்கான அழைப்பை ஏற்று தாங்கள் ஜெபித்த ஜெபமாலைகளின் எண்ணிக்கைகளை எனக்கு அனுப்பிவைத்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.***

சேசுவின் திரு இருதய பக்தி உங்கள் குடும்பங்களில் பரவட்டும். அவரே உங்கள் இல்லங்களில் அரசாளட்டும்!

Benedicamus Dómino

Fr. Therasian +

**சங். திரேஷியன் பாபு**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**



# அன்னையின் ஆரோபணத் திருநாள்

(ஆகஸ்ட் 15)

- சங். J.M. நிக்கொலாஸ் சுவாமி

சின்ன ஆசியாவிலுள்ள கால்சீதன் என்னும் இடத்தில் கி.பி. 451-ம் ஆண்டில் திருச்சபையின் பேர்பெற்ற பொதுச் சங்கம் ஒன்று நடைபெற்றது. திருச் சபையின் பிதாக்கள் திரளான பேர் அங்கு கூடியிருந்தனர். உரோமைச் சக்கரவர்த்தி மார்ஸியன் கூட்டத்தினுள் நுழைந்தார். பிதாக்களிடம் அவர் ஒரு காரியம் கேட்டார். "கடவுளுடைய மாதாவின் உடலை எப்படியாவது கண்டுபிடித்து என்னிடம் கொண்டு வாருங்கள். அத்திரு உடலுக்கென்று ஓர் அழகிய ஆலயம் அமைக்கத் தீர்மானித்திருக்கிறேன். அந்த மாசற்ற உடலே உலகில் மிக விலையேறப்பெற்ற அர்ச்சியசிஷ்ட பண்டம். ஆதலின் ஒரு மகா தேவாலயம் அதற்குத் தோத்திரமாக எழுப்பப்படல் நியாயமே. மரியாயின் மாசற்ற உடலை நீங்கள் கண்டுபிடித்துக் கொடுப்பீர்களானால், நான் அதை ஒரு தங்கப் பேழையில் வைத்து முத்திரையிட்டு, விலையேறப்பெற்ற கற்களால் அலங்கரிக்கப்பட்ட பீடத்தின் கீழ் அதை வைப்பேன். வணக்கத்துக்குரிய பிதாக்களே, நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்: ஒரு காலத்தில் மாமிசமான கடவுளின் வார்த்தையானவருடைய உறைவிடமாயிருந்த அந்த சரீரத்தைக் கண்டுபிடியுங்கள்" என சக்கரவர்த்தி மன்றாடினார்.

கூட்டத்திலிருந்தவர்கள் திகைத்தார்கள். இராயப்பர், சின்னப்பர் இவர்களுடைய உடல்கள் எங்கிருந்தன என அவர்கள் அறிவார்கள். கொன்ஸ்தாந்தின் சக்கரவர்த்தியின் தாயான ஹெலேனா கண்டுபிடித்த கிறீஸ்துநாதருடைய சிலுவை இருந்த இடம் அவர்களுக்குத் தெரியும். கிறீஸ்தவ மறையின் தொடக்கத்தில் கொல்லப்பட்ட வேதசாட்சிகள், கன்னியர் இவர்களுடைய எலும்புகள் அழகிய பெட்டிகளிலும் ஆயிரக்கணக்கான பீடங்களிலும் இருந்தன. ஆனால் எந்தப் பட்டணமாவது, எந்த மேற்றிராசனக் கோவிலாவது, திருச் சேத்திரமாவது தேவதாயின் உடல் தன்னிடம் இருந்ததாகப் பாராட்டவில்லை.

ஜெருசலேம் நகர் மேற்றிராணியாரான (அர்ச்) யுவெனால் கூட்டத்தின் மத்தியில் எழுந்து நின்றார். மரியம்மாளின் மரணத்திற்குப்பின் நிகழ்ந்ததை, ஜெருசலேம் கிறீஸ்தவர்கள் தலைமுறை தலைமுறையாய் அறிந்து வந்ததை யுவெனால் எடுத்துரைத்தார். அந்தச் சபையிலிருந்த பிதாக் களுக்கு அந்த வரலாறு ஏற்கனவே தெரியும்; ஆனால் சக்கரவர்த்தி ஆவலுடன் வரலாற்றுக்குச் செவிசாய்த்தார்.

ஆதாமுடைய பிள்ளைகள் யாவரும் சாகவேண்டும். அந்த நேரம் தேவதாய்க்கு அணுகி வந்தது. அவர்களுடைய மகன் இறந்தார். இப்பொழுது மரியம்மாள் அந்த நேரத்தை எதிர்பார்த்து படுக்கையில் இருந்தார்கள்.

பாவமே மனிதனை உருக்குலைத்து சீரழிப்பது. தேவதாயோ தன் வாழ்வின் இறுதிக் கட்டத்திலும் வெகு அழகுடனிருந்தார்கள்.

வேதம் போதிப்பதற்காக உலகின் பல திசைகளுக்கும் சென்றிருந்த அப்போஸ்தலர்கள் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் தங்கள் அரசியின் மரணப் படுக்கையண்டை வந்து சேர்ந்தனர். கிறீஸ்துநாதருடைய மரணத்திற்குப்பின் அவர்களை விடாது பின்சென்ற அப்போஸ்தலர்கள், இஸ்பிரீத்துசாந்துவின் வருகைக்குப்பின், அவர்களை அருளப்பருடைய பராமரிப்பில் விட்டுப் பிரிந்தனர். ஆனால் எப்பொழுதுமே அவர்கள் அப்போஸ்தலர்களுடைய தாய், அரசி, துயரத்தில் அவர்களது திடம்.

கிறீஸ்துநாதருடைய தூதர்களான அப்போஸ்தலர்கள் கிறீஸ்துநாதருடைய மாதா தன் மகனிடம் போகுமுன் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று வந்தார்கள். சேசுவுக்கு எத்தனையோ செய்திகள் சொல்லி அனுப்பினார்கள்.

அமைதியாய் யாதொரு அவஸ்தையுமின்றி அன்னை உயிர் விட்டார்கள். கிறீஸ்துநாதருடைய முப்பத்துமூன்று வருட மறைந்த வாழ்க்கையைப்பற்றி இனி அவர்கள் வாயிலிருந்து ஒன்றும் கேட்க முடியாது. உலகத்தை அவரிடம் கொண்டு சேர்ப்பதில் அவளிடம் ஆலோசனைக் கேட்க முடியாது. இது அவர்களுக்கு விசனத்தைக் கொடுத்தது.

கிறீஸ்துநாதரின்றி மரியன்னைக்கு உலகம் வெறுமனாகக் காணப்பட்டதென அப்போஸ்தலர்கள் அறிவார்கள். சற்பிரசாதத்தில் அவர் இருந்தபோதிலும் நேரில் பார்ப்பதற்குச் சமானமாகுமா? அவர் பரலோகத்திற்கு எழுந்த பிற்பாடு, அவருடன் தான் ஒன்று சேர அவர் எப்பொழுது அழைப்பார் என அவர்கள் பொறுமையாய்க் காத்திருந்தார்கள். வாழ்நாள்

முழுவதுமே அவர்கள் அவரது அழைப்புக்கும் விருப்பங் களுக்கும் இணங்கி வந்தவர்களல்லவா? இப்பொழுதும் அவருடைய அழைப்பை, மரணத்தை, பொறுமையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக அது வந்தது. அச்சத்துடன் நோக்கப்படும் வெற்றியாளனைப்போலல்ல, ஆனால் விடுதலை செய்பவனை போல் அது வந்தது. தங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்ட போதிலும் அப்போஸ்தலர்கள் ஒருவிதத்தில் மகிழ்ந்தனர். அவர்களை அழைத்துச்செல்ல வந்த தன் மகனுடன் மாமரி இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்கள்.

அந்த நாட்டில் இறப்பவர்களது சடலங்களை நெடு நேரம் வைத்திருப்பதில்லை. அப்போஸ்தலர்கள் தங்கள் அன்னையின் சடலத்தைத் தூக்கிச் சென்று கல்லறையில் வைத்தனர். அடக்கச் சடங்கின்போது, அவர்கள் தாங்கள் பங்கு பற்றாத இன்னொரு அடக்கத்தைப்பற்றி நினைத்தனர். கல்வாரியிலிருந்து அரிமத்தியா சூசையின் கல்லறைக்குச் சென்ற அந்த சுற்றுப்பிரகாரத்தைப்பற்றி அன்னை அவர்களுக்குப் பலமுறை சொல்லியிருந்தார்கள். அந்நியரால் அவர் அடக்கம் செய்யப்படுகையில் தாங்கள் மறைந்திருந்ததைப்பற்றி அப்போஸ்தலர்கள் வெட்கி துக்கித்தனர். பெரிய வெள்ளிக் கிழமையன்று செய்த அந்த தவறுக்குப் பரிகாரமாயிருக்கும்படி, அவரது தாயாரை பரிவுடன் அடக்கம் செய்தனர்.

வழக்கம்போல் தோமையார் பிந்தி வந்தார். முக்கியமான சம்பவங்களுக்கெல்லாம் அவர் பிந்திதான் வருவார் போலும். ஆனால் அவர் பிந்தியது நமக்கு நல்லதாயிற்று. உயிர்த்தெழுந்த கிறீஸ்துவை அப்போஸ்தலர்கள் முதன்முறை சந்தித்தபோது தோமையார் அங்கு இல்லை. கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தார் என்பதை முதலில் சந்தேகித்தார். பின் அதை தாம் உண்மை என ஏற்றுக்கொள்ளுவதற்கான நிபந்தனைகளை விதித்தார். கடைசியாக தம் விரல்களை கிறீஸ்துநாதருடைய காயங்க ளிலும், கரத்தை அவரது விலாவிலும் வைத்தார். சேசு உயிர்த் தெழுந்தார் என்பதற்கு நல்ல அத்தாட்சி தந்ததற்காக நாம் தோமையாருக்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

மாமரி இறந்தபோதும் அவர் பிந்திப் போனார். அடக்கத்துக்கு முன் அவர் வந்திருப்பாரானால் அன்னை கல்லறையிலிருந்து மோட்சத்திற்கு எடுக்கப்பட்டதை நாம் அறியாதிருக்கலாம்.

“அன்னையின் அந்திய காலத்தில் நான் இங்கு வரமுடிய வில்லை. அவர்களது திரு முகத்தையாவது நான் பார்க்க வேண்டும். எல்லோரும் என்னுடன் வாருங்கள். கல்லைப் புரட்டிப் பார்த்துவிட்டு வருவோம்” என வற்புறுத்தினார். அந்த இனிய முகத்தை இன்னொரு முறை பார்க்க அப்போஸ் தலர்களுக்கு பெரும் ஆவல். தோமையாருடன் போய், கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டினார்கள். உடலைக் காணோம். எவரும் அதைத் திருடியிருக்க மாட்டார்கள், அது நிச்சயம். தன் மகனைப் போலவே, தாயும் சரீரத்துடன் மோட்சம் சேர்ந்தார்கள் என தீர்மானித்தனர்.

கல்லறை வெறுமையாயிருந்து. அவர்களது சடலம் இருந்த இடத்தில் அழகிய மலர்கள் காணப்பட்டன. மரண நாற்றம் அங்கு இல்லை. மலர்களின் மணமும் பரலோக வாசனையுமே வீசின.

உயிர்த்த சேசு தம் மாதாவையும் தம்முடன் இருக்கும்படி எடுத்துக்கொண்டார். கிறீஸ்துநாதருடைய உடல்மீது சாவு பெற்ற வெற்றி குறுகியது. கிறீஸ்துநாதருடைய உடலைச் சுமந்தவர்களுடைய உடல்மீது சாவு பெற்ற வெற்றி நீடிக்க முடியாத வெற்றி. மாமரி பூமியிலிருந்து பரகதிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

வெறுமையாயிருந்த கல்லறையருகில் அப்போஸ்தலர்கள் முழந்தாளிட்டு, தாயையும் மகனையும் ஒருங்கே கொண்டிருந்த மோட்சத்தை நோக்கினார்கள். பின் மன மகிழ்வுடன் வீடு திரும்பினர்.

அன்றிலிருந்து கிறீஸ்தவ உலகம் மரியாயின் உடலுக்காக தேடி அலைந்ததில்லை. அது தன் தூய ஆத்துமத்துடன் ஒன்றித்து கடவுளருகில் இருந்தது என அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அர்ச். யுவெனால், சக்கரவர்த்தி மார்ஸியனுக்கும் அவரது அழகிய மனைவி புல்க்கேரியாவுக்கும் கால்ஸீதனில் கூடிய பொதுச் சங்கத்தில் இருந்த திருச்சபையின் பிதாக்களுக்கும் எடுத்துரைத்த வரலாறு இதுதான். யாவரும் முழுத் திருப்தி யுடன் தலை குனிந்து தங்கள் அங்கீகாரத்தை வெளியிட்டனர்.

## மரியாயி மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாள்

(ஆகஸ்ட் 15)

### பரிசுத்த கன்னிகையின் பாக்கியமான மரணம்.

மரியாயி இறந்தது நோயினாலல்ல, முதிர்பிராயத்தால் அல்ல, பாவத்தின் தண்டனையாகவுமல்ல. ஏனெனில அவர்கள் ஒருபோதுமே பாவம் செய்தவளல்ல, நேசத்தால் அவள் உயிர்விட்டாள். அவளுடைய நேச மகன் பரலோகத்துக்கு ஆரோகணமானதிலிருந்து நேசத்தால் அவரை நோக்கியே ஏங்கிக்கொண்டிருந்தார்கள். தன் நேச மகனுடன் ஒன்றிக்கும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார்கள். அவரைப் பிரிந்து வாழ்ந்த ஒவ்வொரு வினாடியும் அவர்களுக்கு வேதனையாயிருந்தது. அவரது ஆத்துமத்தை உடலுடன் பிணைத்திருந்த கட்டுகளை நேசமானது இறுதியாக அறுத்தது; அவர்களது தூய ஆத்துமம் பரலோகத்திற்கு பறந்து சென்றது. உலகப்பொருட்கள்மேல் பற்றின்றி வாழ்கிறவர்கள் பாக்கியவான்கள்; கடவுளைப் பார்த்து நித்தியத்திற்கும் அவரைக் கொண்டிருக்கும்படி அவர்கள் உயிர்விட ஆசையாயிருக்கிறார்கள்.

பிதாப்பிதாக்களும் இவ்வித ஆசையுடன் இருந்தார்கள். அவர்களது கண்கள் எப்பொழுதும் தங்களது பரலோக வீட்டையே நோக்கி நின்றன. தாவீது அரசர் இப்பூமியில் தம்மை பரதேச வாசியாக மதித்து பரகதியை நாடினார். எனது தேகக்கட்டு அவிழ்ந்து, என் ஆத்துமம் தன் சிறையைவிட்டு வெளியேறி சேசுவுடன் ஒன்றிக்க வேண்டும் என அர்ச். சின்னப்பர் ஆசித்தார். சேசு கிறீஸ்துவை அனுபவிப்பதே தமது ஏக ஆசை என வேதசாட்சியான அர்ச். இஞ்ஞாசியார் மொழிந்தார். இப்பூமியின் பிரயாணி போல் ஏங்காதவன் மோட்சத்தில் பிரஜைபோல் வாழ மாட்டான் என அர்ச். அகுஸ்தீன் சொல்கிறார். அசிசி அர்ச். பிரான்சிஸ் எப்பொழுதும் பரகதியையே நோக்கி நின்றார் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் இரவு நேரத்தில் அழகிய வானத்தை நோக்கிக்கொண்டிருப்பார்: "பரலோகத்தை நோக்கும்பொழுது பூமி எத்தனை நிர்ப்பாக்கியமாகத் தோன்றுகிறது" என்பார். மோட்சத்தை நினைத்து ஆசைப் படாதவன் கிறீஸ்தவனல்ல.

**பரிசுத்த கன்னியின் உத்தானம்.** கடவுள்மீது மரியாய் கொண்டிருந்த நேசமானது, உடலினின்று அவர்களது ஆத்து மத்தை அகற்றியது. அவர்களது தூய்மையானது, அழியாமை என்னும் அரச ஆடையால் அவர்களைப் போர்த்தியது. இத்தனை பரிசுத்தமான உடல் கல்லறையில் அழிவது தகுதி யல்ல. பாவத்தின் தண்டனையே இந்த அழிவு. கன்னிமாமரி பாவம்செய்தவர்களல்ல. இவ்விதம் சேசு தம்முடைய மாதாவை நித்திய மகிமைக்கு உயர்த்தினார், கற்பு குன்றா உடல்கள் மேலும் இருதயங்கள் மேலும் கடவுளுக்குள்ள நேசத்தைக் கண்டு நாம் அதிசயிப்போமாக. இனிமேலாக நாம் நமது உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்திருப்போமாக. அற்ப இன்ப சுகத்திற்காக அதை நரகத்திற்கு உள்ளாக்க மாட்டோம். மோட்ச மகிமையை இழக்க மாட்டோம். ஓ பரிசுத்த கற்பே, மரியாயின் உடலை நீ எவ்வளவு அழகுபடுத்தி யிருக்கிறாய்! எங்கள் மதிப்புக்கும் நேசத்திற்கும் நீ எவ்வளவோ உரிமை பெறுகிறாய்? மிக விலையுயர்ந்த திரவியமாக உன்னை நாங்கள் மதித்துக் காப்பாற்றி வரவேண்டும்.

**மரியாயி மோட்ச அரசி.** பூமியில் நாம் நம்மைத் தாழ்த்தும் அளவு பரகதியில் நாம் உயர்த்தப்படுவோம். இது கடவுளது சட்டம் (லூக். 14:11). மரியாயி தன்னை எல்லா சிருஷ்டி களுக்கும் கீழாகத் தாழ்த்தினார்கள். கடவுளுடைய தாய் என்ற மட்டில் அரசியான அவர்கள் தன்னை ஓர் அடிமை என்றார்கள். சம்மனசுகளைவிடத் தூய்மை வாய்ந்த அவர்கள், சுத்திகர நாளன்று தேவாலயத்தில் சாதாரண பெண்களைப்போல் போய் நின்றார்கள். அரசர்களின் குமாரத்தியான அவர்கள், சாதாரண பெண்ணைப்போல் தன்னைத் தாழ்த்தி, உழைத்து வந்தார்கள். எல்லோருக்கும் கீழாக அவர்கள் தன்னைத் தாழ்த்தியமையால் எல்லா சிருஷ்டிகளுக்கும்மேலாக அவர்கள் உயர்த்தப்பட உரிமை பெற்றார்கள். இதை அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளில் கடவுள் செய்தார். மகிமை யுடன் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அவர்கள், மேகங்களுக்குமேல் வெற்றி வீரப்பெண்போல் எழும்பு கிறார்கள். சம்மனசுக்கள் அவர்களை எதிர்கொண்டழைக் கிறார்கள். "வனாந்தரத்திலிருந்து எழும்பி வருகிற இவள் யாரோ?" (உந். சங். 8:8) என்று அவர்களுடைய மகிமையைப் பாடுகிறார்கள். அவர்கள் மோட்சத்தில் நுழைந்ததும் தீர்க்க தரிசிகளும் பிதாப்பிதாக்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். மோயீசன், யாக்கோபின் நட்சத்திரம் என தாம் முன்னறிவித்தவளை வரவேற்கிறார். இசையாஸ், கன்னித் தாய் என தாம் முன்னறிவித்தவளை, எசெக்கியேல், கீழ்த் திசையின் வாசல் எனத் தாம் கூறியவளை, தாவீது மன்னன், அரசரின் வலது பக்கத்தில் நிற்கும் அரசி எனத் தாம் சொன்னவளை, குதூகலத்துடன் வரவேற்கின்றனர். இந்த மகிழ்ச்சிக் கீதங்களின் மத்தியில் மரியாயி தன் தேவகீதத்தை இசைத்து, "என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப் படுத்துகின்றது" என்கிறார்கள். இது தொடக்கமே. மரியாயிக்



கென தயாரிக்கப்பட்டிருந்த சிம்மாசனத்தில் கடவுள் மரியாயை வைத்து, அவளது சிரசில் அரச கிரீடத்தைச் சூட்டி, அவள் பரலோக பூலோக அரசி என சம்மனசுக்களுக்கும் மனிதருக்கும் காட்டுகிறார். ஓ என் மாதாவே, ஓ என் அரசியே, ஓ என் ஆண்டவளே, மகிமையில் வீற்றிருக்கும் உம்மை நான் வணங்குகிறேன். என்னை முழுவதும் உமக்கு அர்ப்பணம் செய்து, உமது சிநேக ஆட்சியின் கீழ் என்னை வைத்து விடுகிறேன். நீர் உண்மையாகவே என்னுடைய பாதுகாவலி யாகவும், அன்னையாகவும் இருப்பீராக. சமாதானமும் கத்தோலிக்க மறையும், கடவுள்மீது அன்பும், திருச்சபைமீது நேசமும் உமது மன்றாட்டால் எங்கும் அரசுபுரியச் செய்யும், ஆமென்.

# பெற்றோரும் பிள்ளைகளும்

**குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்களுக்குரிய பிரதான கடமைகள் எவை என்பதைப்பற்றிய கட்டுரை.**



பிள்ளைகள் மட்டில் தங்களுக்குள்ள பிரதான கடமைகளைப் பெற்றோர் சந்தேகமின்றி அறிந்து இருப்பது அத்தியாவசியம். தாய் தந்தையர் இந்த கடமைகளை அறியாதிருப்பதினால் அல்லது அறிந்தும் அலட்சியம் செய்வதினால், அநேக பிள்ளைகள் துஷ்டர்களாய் வளர்ந்து குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் பெரும் தீங்கு விளைவிக்கிறார்கள். இது விஷயத்தில் பெற்றோர் தேவ சந்நிதானத்தில் மகா கண்டிப்பான கணக்கு கொடுக்க வேண்டியவர்கள். ஆதலால் பிள்ளைகள் மட்டிலுள்ள கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றி வருகிறேனோ இல்லையோவென்று அடிக்கடி சோதித்துப்பார்த்துத் தன்னைத் திருத்திக்கொள்வது தாய் தந்தையர் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்ட கடன் ஆகும். அப்படியானால் பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கு உள்ள கடமைகள் எவை? பிள்ளைகளின் ஆத்தும சரீர நன்மைகளைக் கவனித்தல், அவர்களுக்கு நற்புத்தி புகட்டல், அவர்கள் குற்றங்குறைகளைத் திருத்துதல், அவர்களுக்கு கல்வி கற்பித்தல் ஆகிய இவைகளே பிள்ளைகளின் மட்டில் பெற்றோருக்குரிய பிரதான கடமைகளாம்.

**1. பிள்ளைகளின் ஆத்தும சரீர நன்மைகளைக் கவனித்தல் :**

பிறந்த குழந்தைக்கு கூடிய சீக்கிரம் ஞானஸ்நானம் கொடுத்து அதை சர்வேசுரனுடைய பிள்ளையாக்குதல் பெற்றோரின் முதல் கடமை, முக்கிய கடமை. தான் பெற்ற பிள்ளைக்குத் தாய் அமுதூட்டி வளர்ப்பது சுபாவ ஒழுங்கு. சுபாப ஒழுங்கு என்றால் கடவுளினால் நியமிக்கப்பட்ட இயற்கைச் சட்டம். ஆடு, மாடு முதலிய அறிவில்லாப் பிராணிகள்கூட இச்சட்டப்படி நடப்பதை நாம் கண்கூடாய் கண்டுவருகிறோம். தாய்மார் தக்க காரணமிருந்தாலன்றி தங்கள் பிள்ளைகளைச் செவிலித்தாயிடம் கொடுத்துப் பால் ஊட்டி வளர்க்கச் செய்வது உசிதமன்று. குழந்தையை வேலைக்காரி வசம் ஒப்படைத்துவிட்டு, நாடகம், சினிமா, ரேடியோ, தொலைக்காட்சி, சங்கீதக் கச்சேரி, குதிரைப் பந்தயம் முதலான வேடிக்கை விநோதங்களில் காலத்தைப் போக்குதல் தாய் தன் பிள்ளைக்குத் துரோகம் செய்வதாகும். அந்தஸ்துக்கு தகுந்தாற்போல் பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரம் அளித்தல் தந்தையின் கடமை. இதனிமித்தம் தகப்பன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். “உன் நெற்றியின் வியர்வை நிலத்தில் விழப் பிரயாசைப்பட்டு உழைப்பாய்” என்பது மனிதனுக்கு கடவுளிட்ட கட்டளை. குடும்பத் தலைவன் தான் பாடுபட்டுத் தேடிய பணத்தைக் காதல், கவறாடல், கள்ளுண்டல் ஆகிய அனாச்சாரங்களில் விரயம் ஆக்குவது பெரும் பாதகம்; வீண் வழக்குகளில் ஈடுபட்டு காசைக் கரியாக்குவது மதியீனம். தான் தேடிய பொருளைக் குடும்ப வாழ்க்கைக்குச் சிக்கனமாய்ச் செலவிட்டு, மீதமுள்ள பணத்தை பத்திரமாய்க் காப்பாற்றி விருத்திசெய்து, பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானதும் அவர்களுக்குப் பாரபட்சமின்றி பகிர்ந்து கொடுக்கும் தந்தையே புத்திமான். தன் பிள்ளைக்கு வீட்டில் இடங்கொடாமல் தெருவில் அலைந்து திரியவிடும் தகப்பன் அன்பில்லாத முரடன். “பட்சிகளிடமிருந்து தாய் தந்தையர் ஓர் நல்ல பாடம் கற்றுக்கொள்ளட்டும். பறவைகள்

தங்கள் குஞ்சுகளுக்கு ஆகாரம் தேடிக் கொடுத்து அவற்றைப் போஷித்துப் பாதுகாப்பதே தங்கள் முக்கிய கவலையாகக் கருதி நாள் முழுவதும் அயராது உழைக்கின்றன. குஞ்சுகளுக்கு இறக்கை முளைத்து அவை நன்றாய்ப் பறக்க சக்தியடையும் வரையில், தாய்ப் பறவையும் அதன் சேவலும் தங்கள் குஞ்சுகளைக் கூட்டைவிட்டு வெளியே துரத்திவிடுவதில்லை என்று ஒரு ஞான நூலாசிரியர் எழுதி வைத்திருக்கிறார்.

**2. பிள்ளைகளுக்கு நற்புத்தி புகட்டல் :**

"உனக்குப் பிள்ளைகள் இருந்தால், சிறுவயதிலிருந்தே அவர்களுக்குப் புத்திமதி சொல்லி வளர்ப்பாயாக... உன் மகனுக்கு நற்புத்தி புகட்டு, அவன் உன் ஆத்துமத்தை சந்தோஷப்படுத்துவான்...உன் மகன் தன்னிஷ்டம்போல் நடக்க விட்டுவிட்டால், நீ அவனுக்குப் பயந்து நடுங்க வேண்டியதாயிருக்கும்" என்னும் இவை போன்ற வேத வாக்கியங்கள், பிள்ளைகளை சிறு வயதிலிருந்தே நற்புத்தி புகட்டி வளர்ப்பது பெற்றோரைச் சார்ந்த முக்கிய கடமை என்று தெளிவாய்க் காட்டுகின்றன. "பிள்ளைகளை கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்து சேர்த்தலே பிள்ளை வளர்ப்பின் பிரதான நோக்கம்" என்கிறார் அர்ச். சார்லஸ் பொரோமியோ. கிறீஸ்தவத் தாய் தன் பிள்ளைகளுக்குப் படம், சுரூபம் முதலிய பரிசுத்தப் பொருட்களைக் காண்பித்து சமயோஜிதமாய் வேத சத்தியங்களைப் போதிப்பாள்; பாடுபட்ட சுரூபத்தை அன்புடன் முத்திசெய்யப் பழக்குவாள். பிள்ளை தன்னுடன் முழந்தாளிலிருந்து சிலுவை வரையவும், சேசு மரி என்னும் திருநாமங்களைப் பக்தி விசுவாசத்துடன் உச்சரிக்கவும் கற்றுக்கொடுப்பாள். ஐந்து வயதுக் குழந்தை சிறு ஜெபங்களை ஜெபிக்கப் பழகியிருக்கவேண்டும். பாவத்தைப் பகைக்கவும் சேசுவின் திரு இருதயத்தை நேசிக்கவும் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் உத்தம கத்தோலிக்கராய் வளர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. "வாலிபன் சிறுபிராயத்தில் எவ்வழியில் நடந்தானோ அவ்வழியைவிட்டு விருத்தாப்பியத்திலும் விலக மாட்டான்" (பழ. 22:6.).

பிரான்ஸ் தேசத்து அரசியாகிய பிளான்ஷ் தே காஸ்தில், தனது மூத்த மகனாகிய லூயிஸ் சிறு பிள்ளையாயிருக்கும் போதே அவனைப் பார்த்து, "என் அருமைக் குழந்தாய், எவ்வளவு நேச பாசத்தோடு நான் உன்னைச் சிநேகிக்கிறேன் என்று உனக்குத் தெரியும்; ஆனால் நீ வளர்ந்து பெரியவனான பின் ஒரேயொரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதை விட இப்போதே என் கண் முன் நீ இறந்துபோவது நலம்" என்று அடிக்கடி சொல்வாள். இவ் வார்த்தைகள் பசுமரத்தாணி போல் பிள்ளையின் சிறு ஆத்துமத்தில் ஆழமாய்ப் பதிந்தது. லூயிஸ் பிரான்ஸ் தேசத்தை பெரும் புகழுடன் ஆண்டபோது, இந்த வார்த்தைகளைத் தினந்தோறும், முக்கியமாய் சோதனை காலத்திலும், தாம் ஞாபகப்படுத்திக்கொள்வதாகத் தம் நண்பர்களுக்குச் சொல்லியிருக்கிறார். பக்தியுள்ள தாயின் மடியில் ஞானப்பால் உண்டு வளர்ந்த இந்தப் பிள்ளைதான் அரசரான 9-ம் லூயிஸ் என்னும் அர்ச். ஞானப்பிரகாசியார். இவருடைய திருநாள் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

பருவத்தே பயிர்செய் என்பது மூத்தோர் சொல். சிறுபிள்ளையின் ஆத்துமம் மெழுகுபோலிருக்கிறது. அதன்மேல் நல்ல முத்திரையைப் பதித்தால் அது ஆழமாய்ப் பதிந்து என்றும் அழியாதிருக்கும். பிள்ளையின் சிறு ஆத்துமத்தில் கிறீஸ்தவப் புண்ணியங்களைச் சிறுகச் சிறுக பதிப்பிப்பது நல்ல தாயின் முக்கிய கடமை. ஏழைகள் மீது இரக்கம், துன்பப்படுகிறவர்கள் மட்டில் அநுதாபம், பெற்றோருக்கு மரியாதை, கீழ்ப்படிதல், பிறர்மட்டில் அன்பு, பொறுமை, சாந்தம் முதலிய கிறீஸ்தவப் புண்ணியங்களை அநுசரிக்க ஞானமுள்ள தாய் தன் பிள்ளைக்குக் கற்றுக் கொடுப்பாள். தாயின் உதவியின்றி குழந்தை நடக்குமா? பிள்ளையினருகில் தாய் நின்றுகொண்டு அதன் சிறு பாதங்களைத் தரையில் ஊன்றி நடக்கப் பழக்க வேண்டாமா? இவ்வாறே கிறீஸ்தவத் தாய் தன் பிள்ளையின் சிறு மனசாட்சியை சன்மார்க்க நெறியில் நடந்துசெல்லப் பழக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தாய் தந்தையர் தங்கள் முன்மாதிரிகையினால் பிள்ளைகளைக் கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்து சேர்க்கப் பிரயாசைப்படவேண்டும். வார்த்தையைவிட மாதிரிகையே உத்தமம். பார்த்ததைச் செய்வது பிள்ளைகளின் சுபாவம். பக்தி விசுவாசமுள்ள தாய் தந்தையர் காலை மாலை ஜெபிப்பதையும், தினம் திவ்விய பூசை காண்பதையும், வீட்டில் ஒருவரொருவரை அந்நியோன்னியமாய் நேசித்து சமாதானமாய் வாழ்வதையும் கண்கூடாய் பார்த்துவரும் பிள்ளைகள் நல்ல கிறீஸ்தவர்களாய் வளர்ந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்த புண்ணிய சீலரென யாவராலும் புகழப்படுவார்களென்பது நிச்சயம்.

அர்ச். ஞானப்பிரகாசியார் ஐந்து வயதுப் பிள்ளையாய் இருக்கும்போது தமது மாளிகையில் ஒரு மூலையில் தனியே முழந்தாளிலிருந்து தன் சிறு கரங்களைக் குவித்துக்கொண்டு பக்தியுடன் ஜெபிப்பார். ஏன் இப்படி செய்கிறாய் என்று யாராவது அவரைக் கேட்டால், "அம்மா அப்படி செய்கிறார்களே அவர்கள் செய்கிறதுபோல நானும் செய்கிறேன்" என்று குழந்தைக்குரிய எதார்த்தத்துடன் பதில் அளிப்பார்.

லயன்ஸ் நகரில் மாதாவின் ஆலயத்தில் வயோதிகரான சேனாதிபதி ஒருவர் ஒரு நாள் கோவிலினுள் பிரவேசித்து தேவதாயின் பீடத்துக்குமுன் முழந்தாளிலிருந்து சற்று நேரம் மகா பக்தி உருக்கத்துடன் ஜெபித்தபிறகு, அங்கிருந்த பங்கு விசாரணைக் குருவானவரிடம் சென்று, "சுவாமி, நான் சிறு பிள்ளையாயிருக்கும்போது பக்தியுள்ள என் தாய் என்னை இந்த ஆலயத்திற்குத் தினந்தோறும் அழைத்துவந்து மாதா சுரூபத்திற்குமுன் தன்னருகில் முழந்தாளில் இருக்கச்செய்வாள். அந்த நல்ல தாய் செய்ததுபோல் நானும் என் சிறு கரங்களைக் குவித்து, மாதா சுரூபத்தைப் பார்த்து, பக்தியுடன் வேண்டிக் கொள்வேன். அந்த நாட்கள் எனக்கு மிகவும் பாக்கியமுள்ள நாட்கள்; என் ஜீவியம் பரிசுத்த ஜீவியமாயிருந்தது. என் அன்னையின் முன்மாதிரிகையை நான் ஒருபோதும் மறந்த தில்லை" என்று சொன்னார்.

# பிள்ளைகளின் குற்றத்தைத் திருத்தல்

குற்றம் செய்யும் பிள்ளையை சமயோஜிதமாய்க் கண்டித்துத் திருத்துவது பெற்றோருக்கு சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட முக்கிய கடமைகளுள் ஒன்று. இக் கடமையை மறந்துபோவதும் அலட்சியம் செய்வதும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரும் தீங்கு. வயல்களில் முளைத்து வளரும் களைகளை வெட்டியெறிய விவசாயிகள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்கிறார்கள்! தக்க காலத்தில் களைகளை வெட்டாமல் விட்டுவிட்டால் பயிர் அழிந்துபோகுமென்று அவர்களுக்குத் தெரியும். நற்பயிர் நடுவில் வளரும் களைகளைப் போலவே பிள்ளைகளின் நற்குணச் செய்கை மத்தியில் துர்க்குணமும் துர் நடத்தையும் நாளாவட்டத்தில் வளர்ந்து பலங்கொண்டெழும்பும். விவேகமுள்ள தாய்தந்தையர் தங்கள் பிள்ளையின் ஞான ஜீவியத்தைக் கெடுத்தழிக்கும் களைகளாகிய துர்க்குணங்கள் வளராமல் ஆரம்பத்திலேயே அவற்றைக் கிள்ளி எறிந்து விடுவார்கள். இப்படிச் செய்யத் தவறினால் இவை வளர்ந்தெழுந்து பிள்ளையின் நல்லெண்ணம், நற்கருத்து, நல்ல மனசு எல்லாவற்றையும் நெருக்கி அழித்துவிடும். பிள்ளை பெரியவனானபின் அவனைத் திருத்துவது எளிதன்று. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டில் பழக்கம் கல்லறைமட்டும் என்பது இந்தப் பிள்ளையின் விஷயத்தில் நிறைவேறும்.

சில தாய்மார் தங்கள் பிள்ளையின் குற்றங்குறைகளைக் கண்டியாமல் கண்ணை மூடிக்கொண்டு, மிருகங்கள் தங்கள் குட்டிகளை வளர்ப்பதுபோல் யதேச்சையாய் திரிய விடுவார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போகமாட்டேன், படிக்க மாட்டேன் என்று பிள்ளை பிடிவாதம் பிடித்தால், அதன் மனதுபோல் விட்டுவிடுவார்கள். தகப்பன் அல்லது ஆசிரியர் முரட்டுப்பிள்ளையை அடக்க முயற்சித்தால் தாய்க்கு கோபாவேஷம் பொங்கிவிடும். இவ்வாறு தாய் கொடுக்கும் செல்லத்தினால் சீரழிந்த பிள்ளை வளர்ந்து பெரியவனாகி யாருக்கும் கட்டுப்படாத அடங்காப் பிடாரியாய்த் திரிவான்; குடும்பத்திற்கு அவமானம் வருவிப்பான். துஷ்ட தோழர்களோடு கூடி தனது ஆத்துமத்தின் பரிசுத்த கற்பையும் இழந்துவிடுவான். ஞானஸ்நானம் பெற்று சர்வேசுரனுடைய பிள்ளையாய் மாசற்ற ஜீவியம் ஜீவித்து வந்த பாலகன் இவ்வாறு கெட்டுப்போய் சர்வேசுரனுக்கும் பெற்றோருக்கும் துரோகியானதற்குக் காரணம் இவனை வளர்த்த தாய்தான் என்றால் பொய்யாகாது. அளவுக்கு மீறி செல்லங்கொடுத்த தாயின் குருட்டுப்புத்தியே பிள்ளையின் சீர்கேட்டுக்குத் தூண்டுதலாயிருந்தது. புருஷனை இழந்த விதவைகளுள் சிலர் தங்கள் பிள்ளைகள் மட்டில் வைத்திருந்த முறையற்ற பாசத்தினால் அவர்களைக் கண்டியாமலும், திருத்தாமலும் விட்டுவிடுகிறதுண்டு. இந்தப் பிள்ளைகளைப்பற்றி கைம்பெண் வளர்த்த கழிசிறை என்று நமது பாஷையில் ஓர் இழிச்சொல் வழங்குவதை அறியாதார் எவருமிலர்.

சூசை ஓர் எளிய விதவையின் ஏக புத்திரன். ஒரே பிள்ளையென்று தாய், அவனுக்கு அதிக இளக்காரம் கொடுத்து வளர்த்தாள். சூசைக்கு ஓர் துர்க்குணம் இருந்தது. பள்ளிக்கூடத்தில் தன் உடன் மாணவரின் பென்சில், காகிதம், புத்தகம் முதலான பொருட்களைத் திருடி வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவான். தாய் இதை அறிந்தும் அவனை ஒருபோதும் கண்டித்ததே கிடையாது. அடுத்த வீட்டில் தப்பித்தவறி யாதொரு பொருள் தரையில் கிடந்தால் எவருக்கும் தெரியாமல் எடுத்துவந்து தாயிடம் கொடுத்துப் பத்திரப் படுத்திவைப்பான். அந்நியர் தோட்டங்களில் புகுந்து காய்கறி கனிகளைத் திருடித் தாயிடம் கொடுப்பான். அவள் அவற்றை வாங்கி சமைத்து அவனுக்குப் பரிமாறுவாள். ஆசிரியர் இவனைக் கண்டித்தால் தாய் அவர்களோடு சண்டைக்குப் போய்விடுவாள். இவ்வாறு வளர்த்த பிள்ளை பெரியவனானதும் துஷ்டர்களோடு சேர்ந்து ஓர் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனாகிவிட்டான் என்றால் ஆச்சரியப்பட இடமில்லை. ஒருநாள் சூசையும் அவன் தோழர்களும் ஒரு பெரிய மாளிகையில் நுழைந்து கொள்ளையடிக்கும்போது தன்னைப் பிடிக்கவந்த வேலைக்காரனை சூசை தன் உடைவாளினால் குத்திக் கொன்றுபோட்டான். இக் கொலைக்குத் தண்டனையாக நீதிபதி சூசையைத் தூக்கிலிட்டுக் கொல்லும்படி தீர்ப்பு கூறினார். அவனைத் தூக்கிலிடும் நாள் வரவே தூக்கிலிடும் ஸ்தலத்தில் ஜனத் திரள் வந்து கூடியிருந்தது. காவலர் சூசையை விலங்கிட்டு குறித்தநேரத்தில் தூக்கு மரத்தின் அடியில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அச்சமயம் சூசை தான் ஏதோ பேச விரும்புவதாகச் சொல்லி உத்தரவு பெற்று ஓர் சிறு சொற்பொழிவாற்றினான்:

“இங்கு கூடியிருக்கும் ஜனங்களே, கேளுங்கள். நான் இவ்வாறு தூக்குமரத்திற்கு வந்ததற்கு, அதோ நிற்கிறாளே, என் தாய், அவள்தான் முக்கிய காரணம். நான் சிறுவனாயிருக்கும்போது அவள் என்னைக் கண்டித்து நடத்தவில்லை. நான் அபகரித்துவந்த திருட்டுப் பொருட்களையெல்லாம் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டாள். அவளையும் பிடித்து என்னுடன் தூக்குப்போட்டுக் கொல்லுங்கள்” என்று தன் சிறு பிரசங்கத்தை முடித்தான்.

புத்தியுள்ள தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் அதிமுக்கிய அலுவலில் குருடராயிராமல், தங்கள் கண்களிரண்டினையும் விரியத்திறந்து, அவர்கள் குற்றங்களைக் களைந்து குணத்தைப் பாராட்டி சிறுவரின் நண்பராகிய திவ்விய சேசுவின் இருதயத்துக்கு உகந்த பிள்ளையாய் நடக்கும்படி அவர்களைப் பழக்குவார்களாக.

# கிறீஸ்தவப் புண்ணியங்கள்

### குழந்தைகளுக்கு இளம்வயதில் கிறீஸ்தவப் புண்ணியங்களைப் பெற்றோர்கள் படிப்பித்தலின் அவசியம்

மனுக்குல இரட்சகராகிய திவ்ய சேசு: "**சிறு பிள்ளைகளை நம்மிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதேயுங்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய இராச்சியம் இவர்களுக்கே சொந்தம்**"என்று தமது அப்போஸ்தலர்களிடம் சொன்னார். இதற்கு நேர்விரோதமாய் மனுக்குல எதிரியாகிய லூசிஃபர் பேய், "சிறுபிள்ளைகளை சேசுநாதரிடம் போக விடாதேயுங்கள், அவரிடம் அணுகாமல் தடுத்து விடுங்கள்; ஏனெனில் இவ்வுலக இராச்சியம் இவர்களுக்கே சொந்தம்"என்ற தனது ஊழியர்கள் ஆகிய நாஸ்திகர்மூலம் போதிக்கிறது. "விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தால் நீங்கள் சாகவேமாட்டீர்கள், சர்வேசுரன் உங்களை ஏமாற்றி விட்டார்; நீங்கள் அக்கனியைப் புசித்த உடனே உங்கள் கண்கள் திறக்கப்படும், சர்வேசுரனைப் போலாகிவிடுவீர்கள்" என்று சொல்லி நரகசர்ப்பம் ஆதித்தாய் தந்தையரை வஞ்சித்து மனுக் குலத்தைக் கெடுத்தது. அப்படியே இப்போதும் பொய்க்குத் தகப்பனான பொல்லாத சாத்தான் இக்காலத்துத் தாய் தந்தையரை நோக்கி: கடவுள் என்பதே கெட்டது; கடவுளை விசுவசித்தல் கொள்ளைநோய்; தேவனுமில்லை ஆண்டவனுமில்லை; மதம் அபினுக்குச் சமானம்; உங்கள் பிள்ளைகள் இருதயத்திலிருந்து கடவுள் விசுவாசத்தை வேரோடு களைந்து எறிந்துவிடுங்கள்;அக்ஷணமே இவ்வுலகம் பூலோக மோட்சமாய் மாறிவிடும்; சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம் நிலைபெறும்; நீங்கள் எல்லோரும் செல்வந்தராகிவிடுவீர்கள் என்று பறைசாற்றி, உலகத்தை நாசமாக்கி அழிக்க வழித்தேடித் திரிகிறது. இந்த நூதனக் கோட்பாடுகளைப் பொதுவுடைமைக்காரர் ரஷ்ய தேசத்தில் கடந்த சில ஆண்டுகளாகப் போதித்து அத்தேசத்துப் பிள்ளைகளைப் பெற்றோர்களிடமிருந்து பலாத்காரமாய்ப் பறித்து அவர்களுக்கு நாஸ்திகப் பயிற்சி செய்வித்தும், ரஷ்ய தேசம் பூலோக மோட்சமாய் மாறிவிட்டதாக யாதொரு அடையாளமும் காணோம்.

பிள்ளைகளுக்கு கிறீஸ்தவப் புண்ணியங்களைப் படிப்பிப்பது எப்போதுமே அவசியமென்றபோதிலும், முற்காலத்தைவிட இக்காலத்தில் அதிக அவசியம். ஏனெனில் வேதவிரோதிகள் சிறுவர்களைக் கெடுக்க பெரும் முயற்சி செய்து வருகின்றனர். பிள்ளையின் விசுவாசத்தை அழித்து விட்டால் வளர்ந்து பெரியவனானபின் அவிசுவாசியாய் இருப்பான் என்பது திண்ணம். ஒரு ஊரிலுள்ள பிள்ளைகளின் விசுவாசத்தை இப்போதே பிடுங்கி எறிந்துவிட்டால் இன்னும் இருபது வருடங்களில் அந்த ஊர் முழுவதும் அஞ்ஞான இருள் நிறைந்திருக்குமல்லவா? இத்தகைய பொல்லாத நோக்கத்துடன் வேதவிரோதிகள் திரளான பணத்தைச் செலவிட்டு, நாஸ்திகப் பாடசாலைகள், துன்மார்க்க அச்சுப் பிரசுரங்கள், அவலட்சண சினிமாப் படங்கள் முதலிய சாதனங்களைக்கொண்டு பிள்ளைகளைக் கெடுத்துவருகின்றனர். நமது பிள்ளைகளை கெட்ட அலகையின் வலையில் சிக்காதபடி காப்பாற்ற வேண்டுமானால், அவர்களை சிறுவயதிலேயே கிறீஸ்தவப் புண்ணியத்தில் பழக்குவது அத்தியாவசியம். மேலும் இக்காலத்துப் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் தங்கள் இஷ்டம்போல் திரிவதற்கு முக்கிய காரணம் சிறு வயதிலேயே அவர்களுக்குப் புண்ணியப்பயிற்சி செய்யாத குறையே. "வாலிபன் தனது இளம்பிராயத்தில் எவ்வழி சென்றானோ அவ்வழியை வயோதிகத்திலும் விடான்" (பழ. 22:6) என்பது வேதவாக்கியம். "மரம் எப்பக்கத்தில் சாய்ந்திருக்குமோ அப்பக்கத்தில்தான் விழும்" என்று நமது ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார். முதல் கோணல் முற்றுங் கோணல், தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும், ஐந்தில்



வளையாதது ஐம்பதில் வளையுமா என்னும் சுலோகங்கள் நமது பாஷையில் வழங்கி வருவதை நாமறிந்திருக்கிறோம். பிள்ளையின் ஆத்துமம் மெழுகுபோலிருக்கிறது; அதில் எந்த எழுத்தைப் பதிப்பித்தாலும் அது ஆழமாய்ப் பதிந்து ஒருபோதும் அழியாமல் எப்போதும் நிலைத்திருக்கும். பிள்ளை வளர்ந்தவுடன் அதன் ஆத்துமம் பாறாங்கல்போல் மாறிவிடும். அதில் கிறீஸ்தவப் புண்ணியம் என்னும் பயிற்சியைப் பதிப்பிக்க பிரயாசைப்படுவது வீண். பிள்ளையின் கிறீஸ்தவக் கல்வி சிறு பிராயத்திலேயே ஆரம்பிக்கவேண்டும்; அப்படி ஆரம்பிக்கா விட்டால், குழந்தை சத்திய திருச்சபையின் உத்தம புத்திரனாய் வளர்வது அரிது.

பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே புண்ணியங்களைப் படிப்பிப்பது பெற்றோருடைய கடமை. ஏனெனில் இது மெய்விவாகத்தின் பிரதான கடமைகளில் ஒன்று. பிள்ளைகள் முதன்முதலாக சர்வேசுரனுக்குச் சொந்தம் என்பதைப் பெற்றோர் மறக்கலாகாது. மனிதன் சர்வேசுரனிடத்திலிருந்தே இவ்வுலகிற்கு வருவதுபோல் அவரிடம் திரும்பிச் செல்ல வேண்டியவன். அவன் இவ்வுலகிலிருக்கும் வரையில் தம்மைப் புகழ்ந்து வணங்கி தமக்கு ஊழியம் செய்து, மறுவுலகில் தம்மோடுகூட மோட்ச இராச்சியத்தில் சதாகாலமும் பாக்கியமாய் வாழவேண்டுமென்று சர்வேசுரன் மனிதனை உண்டாக்கி இவ்வுலகிலே வைத்திருக்கிறார். எஜிப்து தேசத்துக் கொடிய சட்டப்பிரகாரம் ஆற்றில் எறியப்பட்ட மோயீசன் என்னும் பாலனைப் பாரவோன் இராஜாவின் குமாரத்தி எடுத்துத் தன் சொந்தப் பிள்ளையாகப் பாவித்து, அதன் தாயிடம் கொடுத்து வளர்க்கச் செய்தாள். அப்படியே சர்வேசுரனும் தமக்குச் சொந்தமான சிறு பாலர்களைத் தாயிடம் கொடுத்து தமக்காக வளர்க்கச் செய்கிறார். பிள்ளையின் மெய்யான சிருஷ்டிகரும் பரம தந்தையும் அன்புள்ள இரட்சகருமாயிருப்பவர் நமது நல்ல ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமி என்பதைப் பெற்றோர் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தாய் தந்தையர் பிள்ளையின் சரீரத்தை மாத்திரம் நேசித்து, அதைப் போஷிக்க அன்னபானம் அளிப்பது போதாது; அதன் ஆத்துமத்தில் கிறீஸ்துநாதரின் முத்திரையைப் பதிப்பிப்பது தங்கள் அதி முக்கிய கடமையென்று நன்கு உணர்ந்திருப்பது அவசியம். ஆனால் இப்பெரிய கடமையைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றுவது எளிதல்ல. இதுவிஷயத்தில் தாங்கள் என்ன செய்யவேண்டுமென்பதை அறிந்துகொள்வது பெற்றோர்மேல் சுமத்தப்பட்ட கடன்.

பிள்ளைகளுக்காக அநுதினமும் வேண்டிக்கொள்வது பெற்றோரின் முதல் கடமை. நாம் செய்யும் சகல கிரிகைகளுக்கும் சர்வேசுரனுடைய உதவி அவசியமென்றால் இவ்வுதவியின்றி பிள்ளைகளைப் புண்ணிய நெறியில் வளர்க்கும் கஷ்டமான வேலையைச் சரிவர செய்து முடிப்பது அசாத்தியம். "ஆண்டவர் பட்டணத்தைக் கட்டாவிடில் வேலைசெய்யும் தொழிலாளரின் பிரயாசையெல்லாம் வீண்." விதை விதைப்பதும் தண்ணீர் பாய்ச்சுவதும் மனிதனுடைய வேலை; ஆனால் பயிர் முளைத்து வளரச்செய்வது சர்வேசுரன். தேவ உதவியில்லாமல் புஷ்பச்செடி மலர்ந்து பலனளிக்காது. இவ்வாறே சிறுவரின் இருதயத்தில் தாய் தந்தையர் விதைக்கும் கிறீஸ்தவப் புண்ணிய விதைகள் முளைத்து வேரூன்றி நற்கிரிகை நன்னடத்தை என்னும் ஞான மலர்களும் கனிகளும் கொடுப்பதற்கு சர்வேசுரனுடைய உதவியைப் பெற்றோர் இடைவிடாமல் இரந்து மன்றாடவேண்டும். மேலும் பிள்ளைகளின் மாசற்ற இருதயத்தையும் அவர்களுக்கு தமது மட்டிலுள்ள அணைகடந்த நம்பிக்கையையும் சர்வேசுரன் பார்த்து பிள்ளைகளின் ஜெபத்தைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்கிறார். இதனிமித்தமே கத்தோலிக்கக் குடும்பங்களில் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றுகூடி காலை மாலை ஜெபங்களை ஜெபிக்கும் சுகிர்த வழக்கம் மிகவும் புகழ்ச்சிக்கு உரியது. பெற்றோர் பிள்ளைகளோடும் பிள்ளைகளுக்காகவும் தினந்தோறும் வேண்டிக்கொள்ளவேண்டும்.

<u>பிள்ளைகளுக்கு சிறுவயதில் ஞானக்கல்வி புகட்ட தந்தையைவிட தாயே தகுதி பெற்றவள்</u>. தந்தை தனது வேலையினிமித்தம் பிள்ளையைவிட்டுப் பிரிந்து வெளியே போகவேண்டியவன். நாள் முழுவதும் கடின வேலை செய்து விட்டு வீடு திரும்பினதும் இளைப்பாறவேண்டியிருப்பதால் பிள்ளையின் ஞானக்கல்வியைக் கவனிக்க அவனுக்கு சாவகாசமும் மன ஊக்கமும் இராது. தாயோ தன் பிள்ளையோடு எப்போதும் இருப்பவளாகையால் பிள்ளையின் குற்றங் குறைகளை அறிந்து சமயோசிதமாய்த் திருத்தக் கூடியவள். சாதாரணமாய்த் தந்தையைவிட தாயே பிள்ளை மீது அதிக அன்புடையவளாதலால், பிள்ளையும் அவள்பேரில் பூரண நம்பிக்கை வைத்து அவள் சொல்லை எளிதில் கேட்கும் சுபாவமுள்ளது. பக்தியுள்ள தாய் தன் பிள்ளை திவ்விய சேசுவையும் அவருடைய திருமாதாவையும் நேசிக்க சிறு வயதிலேயே பழக்குவாள். பிள்ளை குற்றம் செய்யும்போது, குழந்தைகளை நேசிக்கும் தேவபாலனுக்கு, அதனால் எவ்வளவு வருத்தம் உண்டாகிறதென்று நன்குணரச் செய்வாள். நம்மோடு கூட எப்போதுமிருந்து நமக்கு ஆத்தும சரீர நன்மைகளை இடைவிடாமல் செய்துவரும் காவல் சம்மனசைத் தன் பிள்ளை நேசிக்கவும் அவருக்கு அருவருப்பான பாவத்தைச் செய்யாதிருக்கவும் புத்தி சொல்வாள். திவ்விய பாலன் தமது தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து அவர்களுக்குச் சங்கை வணக்கம் உபசாரம் செய்ததை அவர்களுக்குச் சிறு சரிதை மூலமாய் அறிவித்து, அவரைக் கண்டுபாவிக்கும்படி தூண்டுவாள்.

தாய் தன் பிள்ளையைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வது நல்ல வழக்கம். கோவில் சர்வேசுரனுடைய வீடு, தேவநற்கருணையில் அவர் பிரசன்னமாயிருக்கிறார் என்றும், ஆதலால் கோவிலில் ஓடி ஆடிக் குதித்துக் கூத்தாடுவதும், சப்தமாய்ச் சிரித்து கைகொட்டிப் பேசுவதும் தேவ சன்னிதானத்தில் செய்யத்தகாத அநாச்சாரமென்றும் பிள்ளைக்குப் போதிப்பது புத்தியுள்ள தாயின் கடமை. கோவிலில் நடக்கும் ஞானோபதேசம், பிரசங்கம் முதலிய ஞானப்படிப்பினைகளைக் கவனமாய்க் கேட்டுப் பலனடைய பெரிய பிள்ளைகளைப் பழக்கவேண்டும். வீடு திரும்பினதும் பிள்ளையைப் பார்த்து, பிரசங்கத்தில் குருவானவர் என்ன புத்திமதி சொன்னார் என்று கேட்டு சரியான விடை அளிக்கும் பிள்ளைக்கு சிறு வெகுமதியளிக்கும் தாய் தன் பிள்ளை கோவிலில் பிரசங்கத்தைக் கவனிக்கும்படி செய்வாள். பெரிய

பிள்ளைகள் தங்கள் விருப்பத்துக்கும் வெறுப்புக்கும் எதேச்சையாய் இடங்கொடாமல், மனசாட்சியின் கட்டளைக்குச் செவிசாய்த்து தீமையை விலக்கி நன்மையைச் செய்யப் பெற்றோர்கள் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். மனசாட்சியின் கட்டளை சர்வேசுரனுடைய கட்டளை என்றும். தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிகிறதானது சர்வேசுரனுக்கே கீழ்ப்படிகிறதுபோலாகுமென்றும் பிள்ளைகள் நன்றாய்க் கண்டுபிடிக்கச் செய்யவேண்டும். படிப்பு, விளையாட்டு, ஜெபம் முதலிய கடமைகளை அதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தில் செய்யப் பழக்கவேண்டும். இவ்வாறு சிறுவயதிலேயே பிள்ளைகள் பழக்கப்பட்டால், இவர்கள் பெரியவர்களானவுடன் தங்கள் கிரிகைகளை சரிவர செய்வார்கள்.

பெற்றோரும் பெரியோரும் சிறுபிள்ளைகளுக்கு இடறலாயிருப்பது பெரும் தவறு. ஆத்துமங்களை நரகத்துக்கு இழுப்பது விரோதிகளுடைய வேலையேயன்றி சிநேகிதர்களின் வேலையல்ல. இது பசாசின் அலுவல்; சர்வேசுரனால் பிள்ளைகளைக் காக்கும்படி நியமிக்கப்பட்ட காவல் சம்மனசுக்களின் வேலையன்று. பிள்ளைகளை மோட்சத்திற்கு செல்லும் வழியில் நடப்பிக்கவேண்டிய பெற்றோர், அவர்கள் ஆத்துமத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கெட்ட தோழர்கள், கெட்ட புத்தகங்கள், பத்திரிகைகள், அசுத்தப் படங்கள் முதலான பேயின் காரியஸ்தர்களைப் பிள்ளைகளிடமிருந்து கண்டிப்பாய் விலக்கவேண்டும்; சிறுவர்கள் பார்க்கத் தகாத சினிமா படங்களைப் பார்க்க பெரியோர் அவர்களைத் தங்களுடன் அழைத்துச் செல்வது மகா தப்பிதம். சிறுவர் கேட்கும்படி அசுத்த வார்த்தைகளை ஒருபோதும் சொல்லவுங்கூடாது; தங்கள் அதிகாரிகளுக்கு, முக்கியமாய் ஞான அதிகாரிகளுக்கு விரோதமாய்ப் பேசவுங்கூடாது. இவ்வாறு பேசுவதைக் கேட்கும் சிறுவர்களின் மனதில் அதிகாரிகள் மட்டிலிருக்கும் சங்கை வணக்கம், கீழ்ப்படிதல் குறைந்துபோகும்; தங்கள் தாய் தந்தையருக்கும், ஆசிரியர், குருக்கள் முதலிய பெரியோருக்கும் கீழ்ப்படிய மாட்டார்கள். பிள்ளைகளுக்கு இடறலாயிருப்பவர்கள் கழுத்தில் இயந்திரக் கல்லைக் கட்டி சமுத்திரத்தில் அமிழ்த்தி விடுவது நலமென்று நமது தெய்வீக இரட்சகர் எச்சரித்திருக்கிறதைப் பெற்றோர் மறக்கலாகாது.

புது நன்மை வாங்கும் சுபதினம் மனிதனுடைய ஜீவியத்தில் மகா பாக்கியமான நாள். பிள்ளை புத்தி விபரம் அறிந்தவுடன் புது நன்மை வாங்கத் தயார் செய்வது பெற்றோருடைய முக்கிய கடமைகளில் ஒன்று. இதற்கு ஆயத்தமாக பிள்ளையின் தாய் தனது குழந்தைக்குப் பிரதான வேத சத்தியங்களைக் கற்றுக்கொடுத்து அவனுடைய சிறு குற்றங்குறைகளைத் திருத்திக்கொள்ள உதவி செய்யவேண்டும். புது நன்மை வாங்கும் நாளில் பெற்றோரும் உறவினர், சிநேகிதர்களும் புதுநன்மை வாங்கும் பிள்ளையோடு சேர்ந்து திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளவேண்டும். புதுநன்மை வாங்கியபின் வாரத்துக்கு ஒருமுறை தாய் தன் பிள்ளையோடு பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை உட்கொள்ளும் உத்தம வழக்கம் எந்தக் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் குடும்பம் பாக்கியமான குடும்பம் என்பதற்கு சந்தேகம் இல்லை. பிள்ளை தனது கற்பைக் காப்பாற்றி எப்போதும் பரிசுத்த ஜீவியம் ஜீவிக்க மிக்க நிச்சயமான வழி, தேவமாதா சபையில் சேர்ந்திருப்பதே. இச்சபையில் சேர்ந்து தேவதாயின் அடைக்கலத்தில் பிள்ளை உத்தம கிறீஸ்தவனாய் நடப்பது பெற்றோருக்குச் சொல்லொண்ணா ஆறுதல் அளிக்குமென்பது திண்ணம். இங்கு எடுத்துக்கூறப்பட்ட புத்திமதிகளை வாசித்து, பிள்ளைகளைச் சிறுவயதிலேயே புண்ணியப் பயிற்சியில் நடப்பிக்கும் பெற்றோர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் பாக்கிய சம்பாவனையை அடைவார்கள். இத்தகைய தாய் தந்தையரின் தொகை கத்தோலிக்க கிறீஸ்தவ ஜனசமூகத்தில் அதிகரிக்கும் படி சேசுவின் திரு இருதயம் கிருபைபுரியுமாறு மன்றாடுவோமாக.

நன்றி : சேசுநாதருடைய திரு இருதய தூதன்

## உத்தம கிறீஸ்தவன் !

வயோதிகனான விக்டோரீனுஸ் என்னும் உரோமைப் பிரபு தன்னைக் கத்தோலிக்க கிறீஸ்தவன் என்று சொல்லிக்கொள்வானேயொழிய பல வருடங்களாக கோவிலுக்குப் போனதேயில்லை. அவனுடைய பிரிய நண்பன் ஒருவன் அவனைக் கோவிலுக்கு அழைத்தபோது, விக்டோரீனுஸ் தன் சிநேகிதனைப் பார்த்து, ''பயப்படாதே, நான் கத்தோலிக்கன், எனக்கு நல்ல மரணம் கிடைக்கும்'' என்றான். இதற்கு நண்பன், ''அப்பா, விக்டோரீனுஸ், நீ கத்தோலிக்க வேதத்தில் பிறந்தவனாயிருந்தும் உன் நடத்தையினால் சத்திய வேதத்தை மறுதலிக்கிறாய்; திருச்சபை உனக்கிட்டிருக்கும் கட்டளைகளை நீ நிறைவேற்றுகிறதில்லை; கோவில் வாசலில் நான் உன்னைப் பார்த்ததேயில்லை. மனிதருக்குமுன் என்னை மறுதலிப்பவனை, மோட்சத்திலிருக்கும் என் பிதாவின்முன் நானும் மறுதலிப்பேன் என்று நமதாண்டவர் திருவுளம்பற்றியிருப்பதை மறந்துவிட்டாயோ?'' என்றான். ''மறுதலிப்பேன்'' என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் விக்டோரீனுஸ் பயந்து நடுங்கி தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து உத்தம கிறீஸ்தவனாய் நடந்து பாக்கியமான மரணமடைந்தான்.

# இல்லறத்தின் விளக்கம்

வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை
“ஆயரின் குரலொலி” யிலிருந்து எடுக்கப்பட்டது

நாம் வசிக்கும் கடல் சூழ்ந்த இப்பூவுலகமானது நமது மெய்யான ஜென்மதேசமல்ல, பிறதேசம். நாம் எல்லோரும் வழிப்பிரயாணிகள். நாம் போய்ச் சேர வேண்டிய இடம் மோட்சம். இப்பிறதேசத்தில் நாம் வழி தவறிப் போகாமல் நமக்கு ஒரு நல்ல வழிகாட்டியும், பிரயாணத்தில் பசியினால் மடிந்துபோகாமல் நமக்கு அன்னபானமும் அவசரம்.

குன்றின்மேலிட்ட தீபத்துக்குச் சமானமாகிய சத்திய திருச்சபையே நமது தவறாத வழிகாட்டி. ஜெபமும், ஏழு தேவதிரவிய அநுமானங்களுமே நமக்கு ஜீவியந்தரும் அமிர்த போஜனம்.

நமது திவ்விய இரட்சகர் ஏற்படுத்திய ஏழு தேவதிரவிய அநுமானங்களுக்குள், மனுக்குலம் பலுகுவதற்கும் ஜனசமூகம் முன்னேற்றம் பெறுவதற்கும் குடும்பங்கள் அர்ச்சிக்கப்படுவதற்கும் ஏதுவாயிருப்பது மெய்விவாகம் என்னும் தேவதிரவிய அநுமானமாமே.

அன்பான பிள்ளைகளே! மெய்விவாகத்தைப்பற்றிய முக்கிய அம்சங்களை எல்லோரும் கண்டுபிடிக்கவேண்டிய விதமாய் எடுத்துக் காண்பிக்க வேண்டுமென்பதே இவ் வருட தபசுகால நிருபத்தின் நோக்கம்.

1-வது. சர்வேசுரன் ஆதி துவக்கத்தில் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்து அவர்களை ஆசீர்வதித்து: நீங்கள் பெருகிப் பலுகி எல்லா ஜீவப்பிராணிகளையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதி. 1:28) என்று சொன்னபோதே கலியாணத்தை ஏற்படுத்தினார் என்பதற்குச் சந்தேகமில்லை.

நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர் இக் கலியாண உடன்படிக்கையை அர்ச்சித்து **தேவதிரவிய *அநுமானத்தின் மேன்மைக்கு உயர்த்தியிருக்கிறார்.*** “இது பெரிய தேவதிரவிய அநுமானமாயிருக்கின்றது; கிறீஸ்து நாதரிலும் திருச்சபையிலும் என்று சொல்லுகிறேன்” என்கிறார் அர்ச். சின்னப்பர் (எபி.5:32).

திரிதெந்தீன் என்னும் பொதுச்சங்கம் வசனிக்கிறதாவது: மெய்விவாகம் அருள் வேதத்தில் சேசுநாதர்சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு தேவதிரவிய அநுமானங்களில் ஒன்று அல்லவென்றும் அல்லது மனிதரால் மாத்திரம் ஏற்படுத்தப் பட்டதென்றும் சாதிக்கிறவன் எவனோ அவனுக்குச் சாபம்.

இது விஷயமாக 9-ம் பத்திநாதர் என்னும் பரிசுத்த பாப்பரசர் சொல்லுகிறதைக் கேளுங்கள்: மெய்விவாகமானது நமதாண்டவராகிய சேசு கிறீஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்ட அருள்வேத தேவதிரவிய அநுமானங்களில் ஒன்று. **கிறீஸ்தவர்களுக்குள் தேவதிரவிய அநுமானமில்லாத கலியாணமில்லை.** ஆதலால் கிறீஸ்தவ ஆண்கள் பெண்களுக்குள் தேவதிரவிய அநுமானமில்லாத உடன்படிக்கைகள், உதாரணமாகப் பதிவுத் திருமணங்கள், திருச்சபையினால் சபிக்கப்பட்ட வெட்கத்துக்குரியதும் மோசத்துக்குரியதுமான விபசாரமென்பதைக் கிறீஸ்தவர்கள் அனைவரும் அறியக்கடவார்கள்.



2-வது. மெய்விவாக பந்தனம் பிரிக்கக் கூடாத பந்தனம். கணவன் அல்லது மனைவி இறந்தால் மாத்திரம் இப் பந்தனம் பிரிக்கப்படும். நமது திவ்விய இரட்சகருடைய வார்த்தைகளே இதற்கு மறுக்கப்படாத சான்று. “பரிசேயரோ அவரை சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: புருஷனானவன் எந்தக் காரணத்தினாலாவது தன் மனைவியைத் தள்ளி விடலாமா? என்று கேட்டார்கள். அவர் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: ஆதியிலே மனுஷனைப் படைத்தவர் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் என்பதையும், அதினிமித்தம் மனுஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியுடனே சார்ந்து, இருவரும் ஒரே மாம்சமாய் இருக்கக்கடவார்கள் என்று உரைத்ததையும் நீங்கள் வாசித்ததில்லையோ? ஆகையால் அவர்கள் இப்போது இருவரா

யிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். **இதனாலே சர்வேசுரன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக**"(மத்.19:3-6). சென்ற இருபது நூற்றாண்டுகளாக மெய்விவாக பந்தனத்தின் ஏகத்துவத்தையும் அர்ச்சியசிஷ்டதனத்தையும் காப்பாற்றி வருவது பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையேயன்றி வேறல்ல.

16-ம் நூற்றாண்டுவரையில் சத்திய திருச்சபை செழித் தோங்கி வந்த இங்கிலாந்து தேசத்தில் பதிதமதம் எப்படி நுழைந்ததென்றால், எட்டாவது ஹென்றி என்கிற இராஜா தன் சொந்த மனைவி கத்தரீன் இராணி உயிரோடிருக்கும் போதுதானே அவளைத் தள்ளிவைத்துவிட்டு ஆன் பொலின் என்கிறவளைக் கலியாணஞ் செய்ய, அக்காலத்தில் திருச் சபையை ஆண்டு நடத்திவந்த ஏழாவது சாந்தப்பர் என்கிற பாப்பரசரிடம் உத்தரவு கேட்க, அவர் கூடவே கூடாது என்று கண்டிப்பாய்ச் சொன்னதே காரணமென்று சரித்திரம் சாட்சி பகர்கின்றது.

ஆகையால் அன்பான பிள்ளைகளே! கலியாணம் விளையாட்டுக் காரியமல்ல. கடைக்குப்போய்ப் பணங் கொடுத்து வாங்கும் வியாபாரச் சரக்கல்ல. சிறிதுகாலம் உபயோகித்துவிட்டு வெளியே எறியும் பண்டமல்ல. கணவனும் மனைவியும் நன்மையோ தின்மையோ, சுகமோ துக்கமோ, தனமோ தரித்திரமோ, எதுவானாலும் மரணமட்டும் பிரியாமல் ஜீவிக்கவேண்டிய அந்தஸ்தானபடியால், தீர்க்க ஆலோசனை செய்து ஜெபதபங்கள் புரிந்து தேவசித்தம் இன்ன தென்றறிந்து நடத்தவேண்டிய காரியமென்று புத்தியுள்ள எவனுக்கும் தெள்ளத் தெளிவாக விளங்கவேண்டும்.

3-வது. மெய்விவாகம் நல்ல காரியம். ஆனால் துறவறம் இதைப்பார்க்கிலும் மேலான அந்தஸ்து. ஆதலால் இந்த மேலான அந்தஸ்தைத் தெரிந்துகொள்ளும் தேவ அழைத்தல் உள்ள பெண்களையும் ஆண்களையும் தடுப்பது கனமான குற்றம். வலுகட்டாயமாய் இப்பேர்ப்பட்ட பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்துவைக்கும் குடும்பங்கள் செழித்தோங்குவது அபூர்வம். துன்பத்துக்குமேல் துன்பம் அநுபவிப்பது சாதாரணம்.

4-வது. நமது தேசத்தில் பெரும்பாலும் பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற சம்பந்தம் பார்த்து கலியாணம் முடித்துவைப்பது தொன்றுதொட்டு நடந்தேறிவருகிற வழக்கம்.

என்றாலும், பெற்றோர்கள் தங்கள் கருத்தைப் பிள்ளை களுக்குச் சொல்லி, அவர்களுடைய முழுச்சம்மதத்தைப் பெற்ற பிறகு கலியாணத்தை நிச்சயப்படுத்தவேண்டும். பிள்ளைக ளுடைய சம்மதத்தைக் கேட்காததினாலே நடக்கிற அலங் கோலங்கள் அநேகம்.

தாரதம்மியம் பார்த்து, குணாகுணத்தை அறிந்து, முன் பின் யோசித்து சம்பந்தம் செய்வது நியாயம். இதற்கின்றி, குடியனோ வெறியனோ, குருடனோ முடவனோ, படித்த வனோ படியாதவனோ, கோபியோ லோபியோ, வாலிபனோ வயோதிகனோ, குஷ்டரோகியோ க்ஷயரோகியோ, நல்ல வனோ பொல்லாதவனோ, கிறீஸ்தவனோ அஞ்ஞானியோ, இது முதலிய காரியங்களை விசாரியாமல் கடன் கழிந்ததென்று கண்ணை மூடிக்கொண்டு பிள்ளைகளைப் படுகுழியில் தள்ளு கிறவர்கள் பெற்றோர்களல்ல; பஞ்சமாபாதகர்களென்றே சொல்லவேண்டும். மணமக்களுடைய பூரண சம்மதமே மெய்விவாகத்தின் இன்றியமையாத சாதனமென்பதைப் பெற்றோர்கள் மறக்கவேண்டாம். சம்மதம் இல்லையோ, மெய்விவாகம் இல்லை.

5-வது. மெய்விவாகம் நடக்குமுன் ஏதாவது விக்கினம் உண்டோ இல்லையோவென்று அறியும்பொருட்டு, தொடர்ந்து வரும் மூன்று ஞாயிற்றுக்கிழமை அல்லது கடன் திருநாட்களில் பூசை நேரத்தில் கலியாண ஓலை (பறை) வாசிக்க வேண்டு மென்பது திருச்சபையின் ஒழுங்கு; மெய்யான விக்கினங்கள் இருக்குமேயாகில் அறிந்தவர்கள் அவைகளைப் பங்குக் குரு வானவருக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கடைசி பறை வாசித்தபின் மூன்று நாள் சென்ற பின்னர்தான் கலியாணம் நடக்கலாம். பறை வாசித்தபின் ஆறு மாதத்திற்குள் கலியாணம் நடைபெறாவிடில் திரும்பவும் பறை வாசிக்க வேண்டும். தக்க காரணங்களிருக்கும்போது ஓலை வாசிக்கும் விஷயத்தில், மேற்றிராணியாண்டவர், குறைக்கவும் முற்றிலும் வாசியாமல் விட்டுவிடவும் அனுமதி அளிக்கலாம்.

6-வது. கலியாணத்திற்குள்ள முக்கியமான விக்கினங்கள் என்னவென்றால், மணமகனுக்கு 16 வயதும், மணமகளுக்கு 14 வயதும் பூர்த்தியாகுமுன் கலியாணஞ் செய்யக் கூடாது. இது திருச்சபையின் சட்டம். ஆகையால் ஓலை வாசிக்கிறதற்கு முன்பு தானே ஞானஸ்நானக் குறிப்பு அத்தியாவசியம்.

இதுதவிர இரத்த உறவு மூன்றாங்கால் உட்படவும், சம்பந்த உறவு இரண்டாங்கால் உட்படவும், கலியாணத்திற்கு விக்கினங்கள். இந்த விக்கினங்களோடு கலியாணஞ் செய்தால் அது வியர்த்தமான கலியாணமாகும்.

தம்பதிகள் **குறைந்தபட்சம்** ஐந்து மந்திரமும் பிரதான மான வேத சத்தியங்களும் அறிந்திருக்கவேண்டும். இவர்கள் இந்த சமயத்தில் மந்திரம் குறிப்பிடம் படிக்காவிட்டால் இனிமேல் படிப்பார்களென்பது வீண்பேச்சு. இப்பேர்ப்பட்ட வர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் கற்றுக் கொடுப்பது எங்ஙனம்?

மேற்சொன்ன காரியங்களையும் இன்னும் மற்றுமுள்ள விக்கினங்களையும் ஓலை வாசிக்கு முன்னேதானே விசாரிக்க வேண்டியது பங்கு சுவாமிமார்களின் கடமை.

அன்பான பிள்ளைகளே! ஓலை வாசிக்குமுன் இவை களையெல்லாம் விசாரிக்கவேண்டியிருக்க சிலர் சனிக்கிழமை இரவு கனம் பங்குசுவாமியிடம் வந்து மறுநாள் ஞாயிற்றுக் கிழமை ஓலை வாசிக்கத்தான் வேண்டுமென்று மல்லுக்கட்டி வாதாடுகிறது என்ன மதியீனமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இங்ஙனம் முன்பின் யோசியாமல் திடீரென ஓலை வாசித்ததினால் பற்பல இடங்களில் நடந்திருக்கிற சங்கடங்கள் கொஞ்சமல்ல. இவ்வித சங்கடங்கள் நேரிடாதபடி நேரங் காலத்தோடு பங்குசுவாமியிடம் போய் எல்லாம் ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும்.

7-வது. பெண்ணுக்குக் கொடுக்கவேண்டிய சீதனம் சில ஊர்களில் நாளுக்குநாள் அளவுக்குமீறி போகிறதை அறிந்து கவலைப்படுகிறோம். இதனால் விளையும் தீமைகள் பல. கடன்பட்டு கரையேறாமல் திண்டாடுகிற ஏழைக் குடும்பங்கள்

எத்தனை? சீதனம் கொடுக்க வகையில்லாமல் வருடக் கணக்கில் காத்திருக்கும் பெண்கள் எத்தனை? இப்பேர்ப்பட்ட வாலிபப் பெண்களுக்கு ஆபத்து என்ன! மனவேதனையென்ன! பெற்றோர்களுடைய கவலையும் ஏக்கமும்தான் என்ன!

இது விஷயமாக சில கிராமங்களில், சீதனத்தைக் குறைக் கவும், அநாவசியமான வீண் செலவுகளை ஒழிக்கவும், ஏழைப் பெண்களுக்கு உதவிசெய்யவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒழுங்குமுறைகள் நமக்கு மிக்க ஆறுதலையும் கொடுக்கிறது.

*8-வது.* கலியாணஞ் செய்யப்போகிறவர்கள் தேவ ஆசீர் வாதத்தைப் பெறுவதற்கு செய்யவேண்டிய காரியங்களென்ன? முதன்முதலில் சுத்தமான கருத்து இருக்கவேண்டும்.

இரபேல் என்னும் அதிதூதன் தொபியாசுக்குச் சொன்ன தாவது: எவர்கள் தங்களினின்றும் தங்கள் இருதயங்களி னின்றும் தேவனைத் தள்ளி அறிவில்லாத குதிரையையும் கோவேறு கழுதையையும்போலத் தங்கள் காமவிகாரத்தையே முடிக்க வேண்டுமென்றிருந்து கலியாணம் பண்ணுகிறார்களோ அவர்கள்மேல் பசாசுக்கு வல்லமையுண்டு. நீயோவென்றால் உன் பெண்சாதியோடு ஜெபம் செய்து புத்திர சந்தானத்தையே முக்கியமாய் அபேட்சித்து தெய்வபயத்தோடு சகவாசம் பண்ணுவாயாக. (தொபி. 6)

இதுதவிர, கலியாணத்திற்குமுன் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து மெய்விவாகம் நிறைவேறும் தினத்தில் பூசைக்குப் பிந்தி வராமல் நேரத்தோடு கலியாணப் பூசைக்கு வந்து, திவ்விய நற்கருணை உட்கொண்டு, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். முதற்கோணல் முற்றுங்கோணல் என்பதற் கொப்ப அநேகர் கலியாணம் செய்த பிற்பாடு சமாதானமின்றி நிர்ப்பாக்கியமாய் ஜீவிக்கிறதற்குக் காரணம், தக்க ஆயத்தத் தோடும், சுத்த கருத்தோடும் இந்தத் தேவதிரவிய அநுமானத் தைப் பெறாமல், அஞ்ஞானிகளைப்போல நல்லநாள், கெட்ட நாள், முகூர்த்தகாலம், இராகுகாலம், இதுபோன்ற சகுன சாஸ்திரம் பார்ப்பதும், அஞ்ஞான சடங்குகளை அநுசரிப்பதுமே.

*9-வது.* கானாவென்கிற ஊரில் நடந்த கலியாணத்திற்கு நமது திவ்விய இரட்சகர் தம் திருத்தாயாரோடும் சீஷர்களோடும் அழைக்கப்பட்டு அவ்விடத்தில் தமது முதல் புதுமையைச் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்ததுபோல உங்கள் வீட்டில் நடக்கிற கலியாணங்களுக்கும் அவர்களை வரவழைப்பீர்களே யாகில் அவர்களும் ஞானவிதமாய் எழுந்தருளி வந்து சம்பூரண மாய் ஆசீர்வதிப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

விசேஷித்த விதமாய் அமலோற்பவியின் பரிசுத்த பத்தா வும், சேசு இராஜனை வளர்த்த தகப்பனும், திருக்குடும்பத்தின் தலைவரும் தேவ வரங்களால் நிறைந்தவருமான நல்ல தந்தை அர்ச். சூசையப்பரிடம் போங்கள். அவரை நம்பினவர்கள் ஒருபோதும் கைவிடப்பட்டதில்லை.


அன்பான பிள்ளைகளே! "நீங்கள் மூன்றாம் நான்காம் தலைமுறை வரைக்கும் உங்கள் புத்திரருடைய மக்களைக் காணும்படியாகவும், பின்னும் அநவரத சதாகாலமும் பிதா வோடேயும், இஸ்பிரீத்துசாந்துவோடேயுஞ் சுயஞ்சீவியரும் இராச்சியப்பாரஞ்செய்கிற தேவனுமாகிய நமதாண்டவரான சேசு கிறீஸ்துவின் அநுக்கிரகத்தால் முடிவில்லாமல் நித்திய ஜீவியத்தை அனுபவிக்கும்படியாகவும் அபிரகாம் என்பவ ருடைய தேவனும் ஈசாக்கென்பவருடைய தேவனும் யாக்கோபு என்பவருடைய தேவனுமாய் இருக்கிறவர் உங்களுக்குத் துணையாயிருந்து உங்களிடத்தில் தம்முடைய ஆசீர்வாதத்தை நிறைவேற்றக்கடவாராக!"

**வந். பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை**
**தூத்துக்குடி மேற்றிராசனம்**

**தூத்துக்குடி**
1927

## பதித திருமணத்தால் வந்த விளைவு !

**ஒரு கத்தோலிக்கப் பெண் புரொட்டஸ்டாண்ட் பதிதன் ஒருவனைத் திருமணம் செய்யவிருந்ததை அறிந்த குருவானவர் ஒருவர் அவளுக்குக் கூறிய புத்திமதியெல்லாம் வீணாய்ப்போகவே, கடைசியாய் அவனையே திருமணம் செய்துகொண்டாள். சில மாத காலத்திற்குப்பின் அவர்கள் இருவருக்குமிடையே உண்டான நேசம் பகையாக மாறினது. கணவன் திருமணத்திற்குமுன் கொடுத்த வார்த்தைப்பாட்டை மீறினான். தன் கோவிலுக்கு மனைவி வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். அவள் கையிலிருந்த ஜெபப் புத்தகத்தை நெருப்புக்கு இரையாக்கினான். வெள்ளிக்கிழமை, தபசுகாலம் முதலிய நாட்களில் ஒருசந்தி, உபவாசம் இருப்பதை நிறுத்தினான். தேவதிரவிய அநுமானங்களை அவள் பெறாதபடி தடுத்து, சத்திய வேதத்தை பழித்தான். அதைக்கண்ட அந்த நிர்ப்பாக்கிய பெண், இதெல்லாம் அந்தப் பதிதனைத் திருமணம் செய்ததால் வந்த தண்டனை என்று தனக்குள் அழுது புலம்பினாள். இவனுக்குத் தன் மனைவியின்மேல் வெறுப்பு அதிகரித்துவந்தது. ஒருநாள் இவன் வீட்டில் உணவு உண்ண உட்கார்ந்தபோது, கறி பதார்த்தம் உருசியாயில்லை என்று முறையிட்டுத் தன் மனைவியை திட்டி, கையில் கத்தியை எடுத்துக்கொண்டு "கத்தோலிக்க வேதக் கழுதையே, உன்னை இன்று குத்திக் கொல்லாவிட்டால் நான் ஆண்பிள்ளை அல்ல" என்று புலியைப்போல் கத்திச் சீறுவதைக் கண்ட அந்த நிர்ப்பாக்கிய ஸ்திரீ பயந்து நடுங்கி உணர்ச்சியற்று கீழே விழுந்தாள். வெகு நேரத்திற்குப்பின் அவளுக்குத் தெளிவு உண்டானபோதிலும், அன்று அவளுக்கு உண்டாயிருந்த பயமிகுதியால் மறுநாளே அவள் இறந்துபோனாள்.** (M.J.M. VI. 129)





# அர்ச். குவாடலூப்பே மாதா



**(13)** மேற்றிராணியார், மொன்சிஞ்ஞோர் ஜான் த சுமர்ராகா என்பவர் ஹுவான் தியேகோவைத் தம் அரண்மனைக்குள் அனுமதிக்கத் தயங்கினார். இறுதியில், அவருடைய வற்புறுத் தலின் காரணமாக, அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டார். அவர்களுடைய உரையாடலின் முடிவில், இக்காட்சியைத் தாம் கொஞ்சங்கூட நம்பவில்லை என்பதை மேற்றிராணியார் ஹுவானுக்குப் புரிய வைத்தார்.



**(14)** ஹுவான் தியேகோ ஆயருடனான தம் சந்திப்பு தோல்வியில் முடிந்ததை வருத்தத்தோடு நம் மாதாவுக்கு அறிவித்தார். ‘‘ஓ அன்னையே, அந்த மேன்மை மிக்க ஆயரிடம், இன்னும் கூடுதல் தகுதியுள்ள ஒரு தூதரை அனுப்புங்கள். நான் ஓர் ஏழைக் குடியானவன், ஆகவே அவர் என்னை நம்ப மறுக்கிறார்’’ என்றார்.



**(15)** மறுநாள் காலை, தேவதாயின் உத்தரவின் பேரில், தியேகோ மீண்டும் மேற்றிராணியாரிடம் போனார். மாதாவுக்கு மகிமையாக அவர் ஓர் ஆலயம் கட்ட வேண்டுமென்ற செய்தியை டியேகோ அவருக்கு மீண்டும் அறிவித்தார். ஆயர் அவரிடம்: ‘‘என் மகனே, நீ உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்ட நம் மாதாவைக் கண்டாய் என்பதை நிரூபிக்க எனக்கு ஓர் அடையாளம் வேண்டும்‘ என்று சொல்லிவிட்டார்.







**(16)** சந்தேகமுற்ற ஆயர் தம் இல்லத்தைச் சேர்ந்த இருவரை அழைத்து, ஹுவான் தியேகோவின் நடவடிக்கைகள் அனைத்தையும் கண்காணிக்கும்படியாகவும், அவருக்கு மாதாவின் காட்சிகள் கிடைத்தது உண்மைதானா என்பதை அறிந்து வரும்படியாகவும் அவர்களை அனுப்பிவைத்தார்.

**(17)** பின் தொடர்ந்த அந்த இரு ஊழியர்களும் ஹுவானைத் தவற விட்டுவிட்டார்கள். ‘‘இப்போது ஆயரிடம் என்ன சொல்வது என்று நான் கவலைப்படுகிறேன்’’ என்றான் அவர்களில் ஒருவன். ‘‘அதை என்னிடம் விட்டுவிடு, அவரிடம் என்ன சொல்வது என்று எனக்குத் தெரியும்’’ என்றான் மற்றவன்







**(18)** இருவரும் திரும்பி வந்து ஆயரிடம், ஹுவான் ஒரு வஞ்சகன், ஏமாற்றுக்காரர் என்றும், அவர் காட்சி எதுவும் பெறவில்லை என்றும் பொய் சொன்னார்கள்.




**(19)** இதற்கிடையே ஹுவான் மாதா காட்சி கொடுத்த இடத்தை அடைந்தார். அப்போது தேவதாய் அவருக்குத் தோன்றி, ‘‘என் மகனே, மேற்றிராணியார் உன்னிடம் என்ன கூறினார்’’ என்று கேட்டார்கள். ‘‘நீங்கள் அளித்த காட்சிகள் உண்மை என்றும், நீங்கள் உண்மையாகவே கடவுளின் மாதா என்றும் நிரூபிக்க ஓர் அடையாளம் உங்களிடமிருந்து பெற்று வரவேண்டுமென்று அவர் விரும்புகிறார்’’ என்று ஹுவான் தியேகோ கூறினார்.

**(20)** மேற்றிராணியாருக்கு ஓர் அடையாளத்தைத் தருவதாக தேவதாய் வாக்களித்தார்கள்: ‘‘நாளை காலையில் இங்கு வா. மேற்றிராணியாருக்குக் காட்ட ஓர் அடையாளத்தை நான் உனக்குத் தருவேன்’’ என்று அவர்கள் தியேகோவிடம் கூறினார்கள்.




**(21)** தியேகோ வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, தன் மாமா சாகும் தறுவாயில் இருப்பதைக் கண்டார். ''நான் போய் ஒரு மருத்துவரைக் கூட்டி வருகிறேன்'' என்று மரித்துக் கொண்டிருந்த மனிதரிடம் அவர் சொன்னார். ''நீ ஒரு குருவைக் கூட்டிகொண்டு வருவது அதைவிட நல்லது'' என்றார் அவருடைய மாமா.




**(22)** சாகும் தருவாயிலிருக்கும் தம் மாமாவைப்பற்றிய கவலையில் ஆழ்ந்தவராக இருந்த தியேகோ, மறுநாள் விடியற் காலையில், காட்சிகள் நடந்த இடத்திற்குப் போகவிருப்பதை தள்ளிவைத்துவிட்டு, ஒரு குருவை அழைத்து வருவதுபற்றி யோசிக்கலானார்.




**(23)** துயர நினைவுகள் தியேகோவின் மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கின: ''தேவதாய்க்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதற்காக மிகவும் வருந்துகிறேன். பின்னர் அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்வேன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டார்.




**(24)** இத்தகைய நினைவுகளில் மூழ்கியிருந்த தியேகோ, பிரகாசமான மேகம் ஒன்று குன்றிலிருந்து இறங்கி வருவதைக் கிட்டத்தட்ட காணத் தவறிவிட்டார். அம்மேகத்திலிருந்து தோன்றிய தேவதாய், ''நீ எங்கே போகிறாய், என் மகனே?'' என்று கேட்டார்கள். ''நான் ஒரு குருவைக் கூட்டி வரப் போகிறேன், ஏனென்றால் என் மாமா சாகக் கிடக்கிறார். அதன்பின் நான் உங்களோடு இருப்பேன்'' என்று பதில் சொன்னார் தியேகோ.




**(25)** ''நீ இனி உன் மாமாவைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. நானே அவருக்கு உதவி செய்வேன்'' என்றார்கள் மாதா. அதற்கு ''மிக்க நன்றி'' என்றார் தியேகோ. மாதா தொடர்ந்து கூறியதாவது,''குன்றின் உச்சிக்குப் போ, அங்கே ரோஜா மலர்கள் பூத்த செடி ஒன்றைக் காண்பாய். அவற்றை வைத்து என்ன செய்ய வேண்டுமென்று நான் உனக்குத் தெரிவிப்பேன்'' என்றார்கள்.

**(தொடரும்)**

சாங்க்தா மரியா

# குருத்துவ அழைத்தல்

**பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் குருத்துவ அழைத்தல்களை எவ்வாறு பெரிதாய் மதிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் கட்டுரை.**

பிற்பகல். பெரிய வீடு. வீட்டில் ஒரே பையன். மரண அவஸ்தையாய் கிடக்கிறான். எல்லோரும் அவனைக் கைவிட்டு விட்டார்கள். பெற்றதாய் தலைவிரிகோலமாய் புலம்புகிறாள். "ஐயோ! தவஞ்செய்து பெற்றேனே! கண்ணின் மணியைப்போல் காத்துவந்தேனே! எனக்கு கொடுத்துவைக்க வில்லையே! நிலபுலம்... பணங்காசு... எல்லாம் எனக்கு எதற்கு?" என்று கதறுகிறாள்; அலறுகிறாள். பாவம், பெற்ற மனம்!

வைத்திய நிபுணர் ஒருவர் வருகிறார். சிகிச்சை செய்கிறார்... பையன் உயிர் பிழைக்கிறான். பிள்ளையின் தாய் அந்த வைத்தியரை எவ்விதம் வாயார வாழ்த்துவாள்! மனமார போற்றுவாள்! உயிர்ப்பிச்சை கொடுத்த அந்த பேருபகாரியை எவ்விதம் உறவினர்களும் பிறரும் பாராட்டுவார்கள்!

வைத்தியத்தினால் மக்களுக்குச் சேவை செய்யும் மனுஷரை உலகம் வெகுவாய் புகழ்கின்றது. இது நியாயமே. அவர்கள் தங்கள் பிரயாசையால் சரீரத்துக்கு வரும் நோய் நோக்காடுகளைப் போக்கி, புத்துயிர் அளித்து, தங்களை நம்பி வந்தவர்களுக்கு நல்ல சுகத்தைக் கொடுக்கிறார்கள். மேலும், வேதனை சமயத்தில் ஆறுதலளித்து, வேதனையைக் குறைத்து சேவை புரிகிறார்கள். அப்படியானால், ஆத்தும வியாதியைக் குணப்படுத்தி, அழியாத நெருப்பில் விழாமல் ஆத்துமங்களைக் காப்பாற்றிவரும் குருக்களின் பணிதான் என்ன! அவர்களின் பதவிதான் என்ன! அவர்களின் பரோபகாரச் சிந்தனைதான் என்ன! அவர்களது பரித்தியாகப்பான்மைதான் என்ன! ஆத்தும பிணியால் பீடிக்கப்பட்டு, காயப்பட்டு உருமாறி, பாவத்தில் நாறி ஊறிக் கிடக்கும் ஆத்துமங்களையும் கழுவி சுத்தம்செய்து பழுதுபார்த்து, பாவக்கறைபோக, தேவ ஒளியை பரவச்செய்பவர்களல்லோ நமது கத்தோலிக்கக் குருக்கள்!

கிறீஸ்தவ தாய்தந்தையரே, குருத்துவத்தின் மகிமையைப் பற்றி இன்னதென்று நீங்கள் சிந்தித்ததுண்டோ? நமது பையன் ஒருவன் மேற்படிப்பு படித்து, ஒரு நல்ல உத்தியோகத்தை வகித்து, கைநிறையச் சம்பாதித்தால், அளவற்ற பெருமை நாம் கொள்கிறோம். என்றும் இல்லாத உன்னத மகிமை நமது குடும்பத்திற்கு வந்ததாகக் கருதி மனப்பூரிப்பை அடைகிறோம். ஆனால் அவன் மேற்படிப்பை முடித்தபின் குருத்துவ அந்தஸ்தைத் தெரிந்துகொண்டாலோ, அவன் ஏதோ பெரிய தவறைச் செய்துவிட்டது போலும், ஏதோ பைத்தியக்காரத் தனமாய் நடந்துவிட்டது போலும், நாம் மிகவும் அங்கலாய்ப்பு அடைந்து, அழுது பிரலாபித்து, அவனை அந்த நோக்கத்தில் இருந்து எவ்விதத்திலும் தடுக்கப் பிரயாசைப்படுகிறோம். இத்தகைய மனப்பான்மைக்கு உண்மையான காரணம் என்ன? விசுவாசக் குறைவோ? வறுமையோ? அல்லது குருத்துவத்தின் மகிமையைப்பற்றிய அறியாமையோ?

குருத்துவம் ஆவதென்ன என்று கேட்டால், திவ்விய பலி பூசை செய்யவும் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவுஞ் சுதந்திரம் கொடுக்கும் தேவதிரவிய அநுமானம், என்று பெரியோரும் சிறியோரும் பதிலளிப்பார்கள். ஆனால் குருத்துவத்தினால் நமது பிள்ளைகளுக்கு எத்தகைய சுதந்திரம் அளிக்கப்படுகிறது, எத்தகைய பதவி வருகிறது என்று, ஆழ்ந்து உணர்ந்த கிறீஸ்தவ தாய் தந்தையர் வெகு சொற்பப்பேர் என்றே சொல்லவேண்டும்.

நமது பிள்ளைகளில் ஒருவன் கலெக்டருக்கு மிகவும் பிரியமுள்ளவன், அவருடைய பிரமாணிக்கமுள்ள ஊழியன் என்று வைத்துக்கொள்வோம். உடனே நமக்கு கண்காது தெரியாத அளவுக்கு பெருமை தட்டுகிறது. குருத்துவத்தில் நமது பிள்ளை யாருடைய ஊழியனாகிறான்? ஒரு கலெக்டர் உடைய அல்லது ஒரு கவர்னருடைய ஊழியனாகவா? வைசி-ராய் அல்லது இராஜாவுடைய ஊழியனாகவா? "மனிதன் சுயேச்சையாய் விரும்பி அடையக்கூடாத உன்னத பதவிக்கு உயர்த்தப்பட்டு, மெய்யான தேவனும் மெய்யான மனுஷனும் ஆகிய கிறீஸ்துராஜனின் "ஸ்தானாதிபதியாகிறான்" (2 கொரி. 5). "சர்வேசுரனுடைய ஊழியன், சேசு கிறீஸ்துவின் அப்போஸ்தலன்" ஆகிறான் (1 தீத்து). "சர்வேசுரனுடைய தூதனும்" (எபி. 14), "சர்வேசுரனுடைய பரம இரகசியங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவனுமாகிறான்" (2 கொரி. 4).

என்ன பதவி! இதைவிட பெரிய பதவியை நமது மகனுக்கு நாம் இவ்வுலகில் தபம் செய்தாலும் அடைந்துக் கொடுக்கக் கூடுமோ? குருப்பட்டத்தினால் ஜனங்களுக்கு நித்திய உண்மைகளைப் போதிக்கவும், அவர்களை அர்ச்சிக்கவும், அவர்களுக்காக மனுப்பேச திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கவும் சாமானிய மனிதனுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. "நீங்கள் போய் சகல ஜாதி ஜனங்களுக்கும் போதியுங்கள். உங்களுக்குச் செவி கொடுக்கிறவன், எனக்குச் செவிகொடுக்கிறான்; உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறான்" (லூக். 10:16).

மேலும் வேத சத்தியங்களைப் போதிப்பதோடுகூட தங்களிடம் வருவோரைக் குருக்கள் அர்ச்சிக்கவேண்டியவர்கள்.

ஞானஸ்நானத்தின் மூலமாய் சிசுக்களை ஜென்மப் பாவத்தில் இருந்து சுத்திகரித்து, அவர்களுக்கு மோட்ச வாசலைத் திறந்து விடுகிறார்கள். சிசுக்களின் மாசற்ற இருதயத்தில் திரி ஏகக் கடவுள் வந்து வாசஞ் செய்து, அவர்களைப் பரிசுத்தப் படுத்துகிறார். பாவக்கறையால் அசுத்தப்பட்டிருக்கும் விசுவாசிகளுக்கு பாவ மன்னிப்பளித்து, கிறீஸ்தவ குருமார்கள் அவர்களை கிறீஸ்துவோடு ஐக்கியப்படுத்துகிறார்கள். இல்லற வாழ்வை விரும்பும் ஆண்களையும் பெண்களையும் ஆசீர்வதித்து, திருச்சபையின் மெய்விவாகப் பந்தனத்தில் பிணைக்கிறார்கள். இவ்வுலக வாழ்வு முடிந்து, உயிர் துறக்கும் தருவாயிலிருக்கும் மக்களுக்கு ஆறுதலளிக்கவும், பசாசின் தந்திர சோதனைகளை ஜெயிக்கவும், மீதியாயுள்ள பாவங்கள் எல்லாம் பொறுக்கப்பட்டு பயமின்றி பரமனின் திரு தரிசனம் பெறும்படியும் அவர்கள் அவயவங்களில் பரிசுத்த எண்ணெய்ப் பூசி, பிரார்த்தித்து அவஸ்தைப்பூசுதல் கொடுக்கிறார்கள்.

இதெல்லாம்விட உயர்ந்த வரமாகிய பலியிடும் வரமும் குருக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கோதுமை அப்பம், திராட்சை இரசம் இவற்றை தாங்கள் பெற்றிருக்கும் குருத்துவ அதிகாரத்தால் கிறீஸ்துவினுடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்ற வல்லவராகின்றார்கள். “மனித அவதாரத்திற்கு அடுத்த படியாக உன்னத மேன்மை பெற்றது வசீகரமும், திவ்விய பலி பூசையுமே. வசீகர வார்த்தைகளை உச்சரிப்பவர் ஒரு மனிதன்; ஆனால் அவ்வார்த்தைகளுக்குண்டான வல்லமையோ ஒரு கடவுளின் வல்லமையாய் இருக்கின்றது” என்று எடுத்துக் கூறுகிறார் ஒரு பெரியார்.

குருவானவருக்கு குருத்துவத்தில் அளிக்கப்படும் சுதந்திரத்தால், அவர் எவ்வளவு மேன்மையுள்ளவரென்றால், “ஒரு சம்மனசானவரையும் ஒரு குருவானவரையும் சந்தித்தால், முதலில் குருவானவருக்கே தலைகுனிந்து மரியாதை செய்வேன். ஏனெனில் சம்மனசுக்களுக்கும் கொடாத தெய்வீக வரத்தை சர்வேசுரன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார்” என்று அர்ச்சியசிஷ்டவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வார்த்தைகள் வரைமீறிக் கூறப்பட்டவைகளாகுமா? சம்மனசுக்கள் சர்வேசுரன் உடைய சிம்மாசனத்தைத் தாங்கி நின்று, அவருடைய கட்டளைப்படி நடக்கிறார்கள்; குருக்களோ தாங்களே கடவுளின் உயிருள்ள சிம்மாசனங்களாக நின்று, தங்கள் கரங்களில் கிறீஸ்துவை ஏந்துகிறார்கள். சம்மனசுக்கள் பாவத்தை மன்னிக்கும் வரத்தையும் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கும் வரத்தையும் பெறவில்லை; குருக்களோ யார் யார் பாவத்தை மன்னிப்பார்களோ, அவைகள் மன்னிக்கப்படும்; தினமும் ஒப்பில்லாத திவ்விய பூசைப் பலியை ஒப்புக்கொடுக்க வல்லவர்கள்.

இன்னும் குருத்துவத்தின் மகிமை எத்தன்மையானது என்றால், தேவதாயின் விசேஷித்த பக்தராகிய சியன்னா பெர்நார்தீன், குருவானவரை அந்த உத்தமிக்கும் மேலாக உயர்த்துகிறார். “ஓ! பரிசுத்த கன்னிகையே! நான் உம்மைத் தாழ்த்திப் பேசுகிறேன் என்று நினைத்து என்மேல் வருத்தம் வேண்டாம் என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் கடவுள் உமக்கு மேலாகக் குருத்துவத்தை உயர்த்தியிருக்கிறார்” என்று கூறுகிறார். மரியன்னை கிறீஸ்துநாதரை நமக்கு ஒருவிசை மட்டும் கொடுத்தார்கள்; குருவானவரோ தினமும் அவரை நமக்குக் கொடுக்கிறார்; மேலும் சாவு துன்பங்களுக்குள்ளான பூத உடலைக்கொண்ட கிறீஸ்துவை நமக்குக் கொடுத்தார்கள் தேவதாய்; குருவானவரோ, சாவு துன்பங்களையெல்லாம் மேற்கொண்ட புகழுடம்பைக் கொண்ட கிறீஸ்துவைத் தருகிறார்; கன்னித்தாய் பாவிகளுக்காகத் தன் மகனிடம் மன்றாடுகிறாள்; குருவானவரோ, பாவிகளைக் பாவக்கறை களினின்று சுத்திகரிக்கிறார்.

குருத்துவ அந்தஸ்து எத்துணை உன்னத அந்தஸ்து! இதனாலல்லோ கிறீஸ்தவர்கள் குருவானவரை தங்கள் தகப்பனாய் மதித்து, அவரை தகப்பனென்று அழைத்து, என்றும் அவர்களைக் கௌரவப்படுத்துகிறார்கள். இதனால் அல்லோ, கயவன் எவனாகிலும் குருவானவரை எதிர்த்தால், கிறீஸ்தவ மக்களெல்லாம் ஒன்றுகூடி அவருக்கு வந்த அவமானம் தங்களுக்கே வந்ததாகக் கருதி அவனைத் தண்டிக்கிறார்கள். இதனாலல்லோ, ஒருவர் குருப்பட்டம் பெற்று தன் ஊருக்குள் முதன் முதல் பிரவேசிக்கும்பொழுது அந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் இந்த ஒரு குருவினால் தங்களுக்கு வந்த மகிமை எத்தகையதென்று உணர்ந்தவர்களாய் ஆடம்பரத்துடன் வரவேற்பு அளிக்கிறார்கள்.

இத்தகைய உத்தம அந்தஸ்துக்கு நமது பிள்ளைகளை நாம் சந்தோஷத்தோடு அனுப்பிவைக்க சஞ்சலப்படலாமா? நாங்கள் ஏழைகள்; இந்த பையன்தான் வீட்டுக்கு உதவியாய் இருக்கிறான் என்று சொல்வார்கள் சிலர். போதனையைவிட சாதனையே சிறந்த எடுத்துக்காட்டாயிருப்பதால், அவர்கள் பின்வரும் சம்பவத்தை வாசிக்கட்டும்:

ஒரு குடியானவள், பாடுபட்டால் போஜனம் உண்டு. அப்பெண்மணியிடம் உலகம் மதிக்கும் பணங்காசு கிடையாது; உலகம் அலட்சியம் செய்யும் புண்ணியங்கள் நிறைந்தவள். தெய்வ பக்தியுள்ள கிறீஸ்தவ மாது. தன் பிள்ளைகளை சிறு வயதிலிருந்தே கிறீஸ்துவின் நேசத்தில் வளர்த்துவந்தாள்.

ஒருநாள் வேலைசெய்த களைப்பு தீர ஒரு மரத்தடியில் உட்கார்ந்தாள். திடீரென்று பெருமூச்சும் அழுகையும் கேட்டது. என் ஆண்டவரே! என் பிள்ளைகளில் ஒருவனும் உமது குருவானவராக மாட்டானோ?” என்னும் வார்த்தைகள் தொனித்தன. சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த அவளது ஆறு அல்லது ஏழு வயதுள்ள சிறுவன் காதில் இவ்வார்த்தைகள் விழுந்தன. அந்நாளிலிருந்து, இவ்வார்த்தைகள் அவனின் இருதயத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவன் படித்தாலும் படுத்தாலும், விளையாடினாலும் வேலை செய்தாலும், அவ் வார்த்தைகள் அவனுடைய இருதயத்தைத் துளைத்தன. மறு வருடம் அவன் புதுநன்மை உட்கொண்டான். அன்றைய தினம் தன் மகனைக் கட்டியணைத்து அந்த உத்தம தாய் சொல்வாள்: “என் கண்ணே! இன்றைக்கு உன் ஜீவியத்தில் மிகவும் பாக்கியமான நாள்; இன்று நமது திவ்விய ஆண்டவரை உன் இருதயத்தில் அழைத்து இருக்கிறாய்” என்றாள். அதற்கு சிறுவன், “ஏன் அம்மா! உமது மகன் பீடத்தில் ஏறி, கிறீஸ்து நாதரைக் கையில் ஏந்தும் நாள் முக்கியமான நாளல்லவோ” என்றான். உடனே அந்த ஏழைப் புண்ணியவதி மெய்மறந்து சிறுவனை இறுகக் கட்டியணைத்து; ஆனந்தக் கண்ணீர் சிந்தத்

தன் மகனை முத்தமிட்டாள்.

அந்த சிறுவன் ஒருநாள் குருவானவராகிப் பலியை ஒப்புக்கொடுத்தான். அந்த ஏழைக் குடியானவள் தன் மகனின் கரங்களினால் திவ்விய ஆண்டவரை உட்கொள்ளும் பாக்கியம் பெற்றாள்.

அந்தப் புண்ணியவதி அநேக வருஷங்களுக்குப்பின் அவஸ்தையாய்க் கிடந்தாள். அப்போது தன் மகனை அவள் அருகில் அழைத்தாள். தன் சரீர வேதனையெல்லாம் மறந்து போய், மலர்ந்த முகத்தோடு, ''என் நேச மகனே! சந்தோஷமாய் சாகிறேன். என் மகன் ஒரு குரு; நான் என் குருவின் அருகில் உயிர் விடுகிறேன்'' என்று சொன்னாள். கடைசி நேரம் வந்தது. ''என் மகன்! என் கடவுளே!'' என்ற வார்த்தைகளோடு உயிர் துறந்தாள்.

இது கட்டுக்கதையா? அல்ல. உண்மையான சம்பவம். தனது தள்ளாத வயதில் இதைச் சொன்ன அக்குருவானவர், உணர்ச்சி மேற்கொள்ள, கண்ணீர் சொரிந்தார்.

பாரதத் தாய் தந்தையர்களே! பாரத தேசத்தின் விடுதலைக்காக பலர் தங்கள் பிள்ளைகளைத் தத்தம்செய்து மகிழ்வடைகிறார்களே. பாரத தேசம் பசாசின் அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்பெற்று, பாரத மக்கள் அனைவரும் மெய்யான கடவுளைத் தொழுதொழுக உங்கள் பிள்ளைகளை அர்ப்பணஞ்செய்ய முன்வரமாட்டீர்களோ? உங்கள் நெஞ்சில் பூர்வீக கிறீஸ்தவர்களின் வீரியமும் விசுவாசமும் எங்கே? உங்கள் பிள்ளைகளில் ஒன்று இரண்டுபேர் குருத்துவ அந்தஸ்துக்கு எல்லாம் வல்ல சர்வேசுரனால் அழைக்கப் பட்டால், உங்கள் பிள்ளைகளை நீங்கள் இழந்தவர்களாகக் கருதுவது கிறீஸ்தவ மனப்பான்மையாகுமா? உலக உத்தியோகங்களை வகித்து ஆயிரமாயிரமாக சம்பாதிக்கும் போது நீங்கள் அடையும் ஆனந்தப் பெருக்கு, கிறீஸ்துவின் ஸ்தானாதிபதியாய் நின்று நித்திய உண்மைகளைப் போதித்து, உலகிற்கு வானுலக தேவனை வரவழைத்து, பாவம் நிறைந்த மானிடருக்காக திவ்விய பலியில் மனுப்பேசி உலகத்திற்கே பணிபுரியும் மகனைப் பார்த்து முகமலராது, இருதயம் ஆனந்தங்கொள்ளாது இருக்கும் தாய் தந்தையர் உண்டோ? பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய் தந்தையரே, பிள்ளைகளை அளித்த பரலோகப் பிதாவுக்கு பிரதி நன்றி செலுத்த ஆவலாய் இருக்கின்றீர்களோ? உங்களுடையவும் குடும்பத்தினுடையவும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய ஆசிக்கிறீர்களோ? உங்களுடைய பிள்ளைகளால் உங்களுக்கு நீடிய அருளும் ஆசீரும் வரவேண்டுமென்று விரும்புகிறீர்களோ? உண்மையான தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு பாரத நாட்டின் ஆன்மீக நலத்தைக் கருதுகிறீர்களோ? அப்படியானால் நீங்கள் உங்கள் பிள்ளைகளின் குருத்துவ அழைத்தலைப் பெரிதாய் மதியுங்கள்; உங்கள் குடும்பத்தில் அந்தப் பாக்கியம் வரவேண்டுமென்று இராப் பகலாய்ப் பிரார்த்தியுங்கள்; நல்லொழுக்கத்தாலும், பரித்தியாக பான்மையாலும் போதனை சாதனையாலும் பிள்ளைகளுக்கு நற்புத்தி புகட்டுங்கள்;தேவ அழைத்தலிருக்கும் பிள்ளைகளுக்கு யாதொரு இடையூறுமில்லாமல், பெற்றமனம் உடைந்தாலும், பரித்தியாகத்தை ஏற்றுக்கொண்டு குருமடத்திற்கு அனுப்பி வையுங்கள்.

## குருவானவரின் தாயின் மகிமை !

**குருப்பட்டத்தின்போது, புதிய குருவின் இரு கரங்களையும் கிறீஸ்மா தைலத்தால் பூசி, ஒரு சிறு கைத்துண்டினால் சேர்த்துக் கட்டப்படும் ஒரு சடங்கு உண்டு. அந்த சிறு கைத்துண்டு மானுதெர்ஜியா** (Manutergia) **என்று அழைக்கப்படுகிறது. பின்னர் அது குருவானவரின் தாயிடம் வழங்கப்படும். அந்தத் தாய் மரண மடையும்போது அந்தக் கைத்துண்டினால் கரங்களைக் கட்டி அடக்கம் செய்யப்படுவது வழக்கம்.**

**இது எதற்கென்றால், இப்படி மானுதெர்ஜியா துண்டினால் கட்டப்பட்டதாக சர்வேசுரனுடைய நீதியாசனத்திற்கு முன்பாகச் செல்லும் அந்தத் தாயின் ஆன்மாவிற்கு, நமதாண்டவர் இரக்கம் காட்டுவார். தமது குருவின் தாய் என்று மதிப்பளித்து, அந்தத் தாயை மோட்சத்திற்கு அழைத்துச் செல்வார் என்பது நமது பாரம்பரிய நம்பிக்கையாகும்.**



# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!



## அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே
### எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !

அப்போஸ்தலர் என்னும் சொல் - அப்போஸ்தெல்லோ (Apostello) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. இதற்கு தூது - (முன் அனுப்புதல்) என்று பொருள். அப்போஸ்தலர்கள் வெறும் தூதர்கள் மட்டுமன்று, சேசுவின் அலுவலைத் தொடர்ந்து நடத்திய பிரதிநிதிகள். புதிய ஏற்பாட்டில் இச்சொல் 80 தடவைகள் காணப்படுகிறது.

### தேவ அன்னை அப்போஸ்தலர்களின் அரசி

*தேவதாய் இந்த அப்போஸ்தலர்களுக்கெல்லாம் அரசியாக இருக்கிறார்கள். அது எவ்வாறு என்று பார்ப்போம்!*

*1) "ஒரு ஸ்திரீ சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள், அவளுடைய பாதங்களின் கீழ் சந்திரனும் சிரசின்மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஓர் கிரீடம் இருந்தது" (காட்சி. 12:1). இங்கே சொல்லப்பட்ட ஸ்திரீ யார்? மகா பரிசுத்த கன்னிமரியாயே என்று வேதபாரகர்கள் விளக்கம் கூறுகிறார்கள். திருச்சபையும் அவ்வாறே போதிக்கிறது. சிரசில் கிரீடம் யாருக்குச் சூட்டப்படும்? அரசிக்கு! இங்கே பரி. கன்னித்தாய் சிரசில் கிரீடம் அணிந்தவர்களாய் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். அதோடு அந்த கிரீடம் பன்னிரு நட்சத்திரங்களால் சூழப்பட்டிருக்கிறது. அந்த 12 நட்சத்திரங்கள் சேசுவின் 12 அப்போஸ்தலர்களை குறிக்கிறது என்கிறார்கள் வேதசாஸ்திரிகள். ஆகவே, தேவ அன்னை அப்போஸ்தலர்களுக்கு அரசியாக, இராக்கினியாக, அவர்களது மகிமையாகத் திகழ்கின்றார்கள் என்ற கருத்தை இது தருகிறது.*

*2) "இதோ உன் தாய்" என்று சிலுவையினடியில் தேவதாயை அர்ச். அருளப்பர் வழியாக நமக்கும் விசேஷமாக அப்போஸ்தலர்களுக்கும் தாயாக நியமித்தார் நமதாண்டவர் சேசு கிறீஸ்து. ஆகவே, தேவ அன்னை மகிமையலங்காரங்களால் நிறைந்து, படைப்புக்கள் எல்லாவற்றிலும் உயர்ந்து உந்நத சிருஷ்டியாக விளங்கும் தேவதாய் தமது மகிமையால் அனைவருக்கும் - அப்போஸ்தலர்களுக்கும் இராக்கினியாகத் துலங்கினார்கள்.*


*3) மனிதருக்கு கிறீஸ்துநாதரைப் போதிக்கவும், அவர் கொண்டுவந்த இரட்சண்யத்தை இவ்வுலகில் பரப்புவதற்கும் ஆண்டவரால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்கள் அப்போஸ்தலர்கள். அவர்களைத் தேற்றி, சேசுவின் போதனைகளையும், அவரது அன்பையும் சுட்டிக்காட்டி, ஊட்டி அவர்களைத் தயாரித்தவர்கள் நம் தேவதாய். அப்போஸ்தலர்களைத் தயாரித்தவர்கள், அப்போஸ்தலர்களுக்கும் மேலாக, உயர்ந்தவர்களாக - இராக்கினியாக இருக்கவேண்டுமல்லவா? ஆகவே, தேவ அன்னை அப்போஸ்தலர்களின் இராக்கினியாக இருக்கிறார்கள்.*

*4) நமதாண்டவரின் விண்ணேற்பிலிருந்து, அப்போஸ்தலர்களோடு ஜெபத் தியானத்திலும், மன்றாட்டிலும் ஈடுபட்டு சேசு வாக்களித்திருந்த தேற்றுகிறவரான திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரை தேவ அன்னை பெற்றுத்தந்தார்கள். இந்த பரம நிகழ்ச்சிக்காக அப்போஸ்தலர்களை ஆயத்தம் செய்தவர்கள், அவர்களே. இதனாலேயே தேவ அன்னை அப்போஸ்தலர்களின் இராக்கினியாக இருக்கிறார்கள்.*

### படத்தின் விளக்கம்

*படத்தில்அப்போஸ்தலர்களின் குழுமத்திற்கு மேல் அமலோற்பவியாக, தப்பாத பரிந்துரை மற்றும் மத்தியஸ்தத்திற்கு அடையாளமாக கரங்களை விரித்த வண்ணமாக தேவதாய் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது சிரசை சுற்றி 12 நடசத்திரங்களும் பிரகாசமான வெளிச்சத்துடன் இருப்பதையும், சம்மனசு ஒருவர் அவர்கள் இராக்கினி என்பதை உணர்த்த கிரீடத்தைக் கொண்டவராக உள்ளார். கீழே, தேவதாய் அக்கினிமயமான இஸ்பிரீத்துசாந்துவை அப்போஸ்தலர்களுக்குப் பெற்றுத் தருவதாக வெளிப்படுத்துகிறது.*

*எனவே நாமும் தேவ அன்னையை* **அப்போஸ்தலர்களின் இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** *என்று பிரார்த்திப்போமாக.*



# திரிதெந்தீன் பலிபூசையை
## அறிந்துகொள்வோம்!

### 2-ம் பாகம் - காணிக்கைகளை ஒப்புக்கொடுத்தல்
**ஒப்புக்கொடுத்தலின் நிறைவு செபங்கள்**

### "Suscipe Sancta Trinitas - பரிசுத்த திரித்துவமே"

குருவானவர் நிருபப்பக்கத்தில் நின்றவாறு தமது கரங்களைச் சுத்திகரம் செய்த பின்னர், மெல்ல பீடத்தில் நடுப்பகுதிக்கு வருகிறார். நிறைந்த நம்பிக்கையுடன் பாடுபட்ட சிலுவையை நோக்கி தமது கண்களை உயர்த்திய பின்னர் மீண்டும் தாழ்த்துகிறார். பிறகு தாழ்ச்சியுடனும் சங்கை மேரையுடனும் பீடத்தின் மீது தமது கரங்களைச் சேர்த்து வைத்து, தாழ்ச்சியைக் காட்டும் பாவனையோடும் சங்கையோடும் கீழ்க்கண்ட செபத்தைச் சொல்கிறார்.



**"Suscipe Sancta Trinitas -** ***பரிசுத்த தமதிரித்துவமே, எங்கள் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதரின் பாடுகள், உத்தானம், ஆரோகணம் ஆகியவற்றின் ஞாபகமாகவும், எப்பொழுதும் கன்னிகையாகிய முத்திப்பேறு பெற்ற மரியம்மாள், முத்திப்பேறு பெற்ற ஸ்நாபக அருளப்பர், அப்போஸ்தலரான அர்ச். இராயப்பர், சின்னப்பர் இவர்களுடையவும் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் மகிமைக்காகவும், நாங்கள் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிற இந்தக் காணிக்கையைக் கையேற்றுக்கொள்ளும். இது அவர்களுக்கு மகிமையாகவும்,எங்களுக்கு இரட்சண்யமாகவும் பயன்படுவதாக. அவர்களுடைய ஞாபகத்தை இவ்வுலகில் கொண்டாடுகிற எங்களுக்காக அவர்கள் பரலோகத்தில் மன்றாடக்கடவார்களாக. எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துநாதர் பேரால் ஆமென்."***

### ஜெபத்தின் வியாக்கியானம்

இந்த ஜெபத்தில், சற்று முன்பு குருவால் ஒப்புக் கொடுக்கப்பட்ட அப்பரசக் காணிக்கை செபத்தைப் போன்று மீண்டும் திரும்பவும் மன்றாடப்படுகிறது. ஆனால் அதைவிட சற்று வளர்ந்த புதிய அம்சங்களைக்கொண்டு அது விளங்குகிறது. முந்தைய இரண்டு காணிக்கை செபங்கள் பிதாவை நோக்கியும், திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரை அழைத்தும் ஜெபிக்கப் படுகின்றன. இப்போது இந்த ஜெபத்தில், திருச்சபை பரிசுத்த தமதிரித்துவத்தை நோக்கி ஜெபிக்கிறது. பீடத்தில் தயாரிக்கப் படும் பலிபொருட்களை பரிசுத்த தமதிரித்துவத்திற்கு ஒப்புக் கொடுக்கிறது. இப்போது அப்பமும் இரசமும் சேர்த்து ஒப்புக் கொடுக்கப்படுகிறது. அதோடு ஒப்புக்கொடுக்கப்படும் இந்த நற்கருணைப் பலியானது கிறீஸ்துவின் வாழ்வின் இரகசி யங்களுடன் (பாடுகள், உத்தானம், ஆரோகணம்) அர்ச்சிய சிஷ்டவர்கள் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள் என்ப தையும் சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில் பூசையானது மீட்பின் முழு அளவையாகக் கொண்டாடப்படுகிறது. அவற்றின் முதன் மையான பாகங்கள் இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. அதே போன்று எழுந்தேற்றம் முடிந்த பிறகு ஜெபிக்கப்படுகிற ஜெபத்திலும் இது வெளியிடப்படுகிறது. ஆண்டவரின் பாடுகளின்போது, மாசு மருவற்ற பலிப்பொருளாக அவரே பலியிடப்படுகிறார். அவர் தாமே தமது உயிர்ப்பில் மகிமைப் படுத்தப்படுகிறார். அவரது விண்ணேற்பில் நமது இரட்சண்யம் விளையும்படியாகவும், மீட்பின் நிறைவாக இருக்கும்படி யாகவும் அவர் சர்வேசுரனுடைய அரியாசனத்திற்கு உயர்த்தப் படுகிறார். பீடத்தில் கிறீஸ்துவின் துயரங்கள் மட்டுமின்றி,

அவரது வாழ்வின் மகிமையின் இரகசியங்களும் பிரதிநிதித்துவ படுத்தப்படுகிறது, மற்றும் புதுப்பிக்கப்படுகிறது. அங்கே, மரித்தாலும் மோட்சத்தில் என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராய் இருக்கிற கிறீஸ்துதானே தம்மையே ஒப்புக்கொடுக்கிறார்.

திவ்விய பலிபூசையானது திரியேக தேவனுக்கு மட்டுமேயல்லாமல், அர்ச்சியசிஷ்டவர்களுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதாய் இச்செபம் இருக்கிறது. இருப்பினும் சர்வேசுரனுக்கு மிக மேலான ஆராதனை மகிமைக்காக மட்டுமல்லாமல், பீடத்தில் எந்த அர்ச்சியசிஷ்டவர்களின் நினைவைக் கொண்டாடுகிறோமோ அவர்களுக்கு சங்கை மரியாதைக்காக *(in honorem)*, அவர்களின் நினைவுக் காக *(commemoration)* பூசை ஒப்புக் கொடுக்கப்படுகிறது. திருச்சபையின் ஒழுங்குபடி, அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே பூசை நிறைவேற்று தலின்போது, அர்ச்சியசிஷ்டவர் களை அடிக்கடி குறிப்பிடுவது வழக்க மாக இருக்கிறது. இதன்படி அர்ச்சிய சிஷ்டவர்களுக்கு மிக சங்கையும், மரியாதையும் தெரிவிக்கப்படுவது தெளிவாகிறது. அவர்கள் நினைவு கூரப்படுவதனால், அவர்களது பெயர்கள் மரியாதையுடன் பலி பூசையில் குறிப்பிடப்படுகின்றன. இது எதற்கெனில், இந்தப் பலியானது அவர்களின் சங்கை மரியாதையில் *(in honorem)* ஒப்புக்கொடுக்கப்படுவதா லேயேதான். இவ்வாறு அர்ச்சிய சிஷ்டவர்களைச் சுட்டிக்காட்டும் வார்த்தைகள் உண்மையிலேயே பரிசுத்த பலியின் மூலம் மோட்சத்தில் அவர்கள் அடையும் பலனை உணர்த்துகிறது; அதோடு பூமியில் அவர்கள் மீதான வணக்கத்தைப் பரப்புதலுக்காகவும் பூசை ஒப்புக் கொடுக்கப்படுகிறது. பூமியில் மேலும் மேலும் அந்த அர்ச்சியசிஷ்டவர்கள் சங்கை செய்யப்படவும், மகிமைப்படுத்தப்படுவதற்காகவுமே நாம் ஜெபிக்கிறோம், பூசையை ஒப்புக்கொடுக்கிறோம். இதன் பொருள் என்னவெனில் நாம் பலியையும், ஜெபத்தையும் அர்ச்சியசிஷ்டவர்கள் சார்பாக அல்லாமல் நமக்காக ஒப்புக்கொடுக்கிறோம்; நமது சொந்த நன்மைக்காகவும், பயனுக்காகவுமே அவர்களுக்கு அதிக சங்கை செய்கிறோம், மகிமைப்படுத்துகிறோம். திவ்விய பலிபூசையிலும், அதன் வழியாகவும் எந்த அளவிற்கு நாம் அர்ச்சியசிஷ்டவர்களை சங்கையும் மகிமையும் படுத்து கிறோமோ அந்த அளவிற்கு நாம் நமது சொந்த நலனில் முன்னேறுகிறோம் *(nobis ad salutem)*. இந்த வழியாகவே நாம் அர்ச்சியசிஷ்டவர்களின் வல்லமை யுள்ள பரிந்துரையை நமக்காகப் பெற்றுக்கொள்கிறோம்.




*(illi pronobis intercedere dignentur in coelis)* - மோட்சத்தின் பிரஜைகளான அர்ச்சியசிஷ்டவர்களின் நினைவை நாம் பூமியில் கொண்டாடுவதால், சர்வேசுரனிடம் நமது சார்பாக மன்றாடி, சகாயங்களைப் பெற்றுத்தரும்படியாக அவர்களைத் தூண்டுகிறவர்களாயிருக்கிறோம். அதோடு முத்திப்பேறு பெற்றவர்கள் பலியின் புகழ்ச்சியாகவும், நன்றியறிதலாகவும், தங்களின் பெயரால் சர்வேசுரனுக்கு நாம் ஒப்புக்கொடுப்பதால் மகிழ்ச்சியடைகிறார்கள். அதாவது சர்வேசுரனிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட எல்லா நன்மைகளுக்காகவும், வரப்பிரசாதங்களுக்காகவும் மற்றும் மகிமைகளுக்காகவும் நாம் சர்வேசுரனுக்குப் புகழ்ச்சியாகவும், நன்றியறிதலாகவும் அதனை ஒப்புக்கொடுக்கிறோம். ஏனெனில் அர்ச்சியசிஷ்டவர்களில் சர்வேசுரன் மகிமையடைகிறார். அதனால் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

பெயர் சொல்லி பூசையில் நினைவுகூரப்படும் அர்ச்சியசிஷ்டவர் களைப்போலவே, பாவசங்கீர்த்தன மந்திரத்தில் குறிப்பிடப்படும் அர்ச்சி யசிஷ்டவர்களும் இருக்கிறார்கள். (இதில் அதிதூதரான அர்ச்சியசிஷ்ட மிக்கேல் சம்மனசானவர் ஆடம்பரப் பூசையில் தூபம் மந்திரிக்கும்போதே குறிப்பிடப்படுகிறார்). ஆகையினால் தான் ஜெபத்தில் "இவர்களுடையவும் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் - *et istorum et omnium Sanctorum*" என்று சொல்லப்படுகிறது. இப்படி "இவர்களுடையவும்" என்று சொல் லப்படும் அர்ச்சியசிஷ்டவர்கள் யார்? நாம் மேலே குறிப்பிட்டவர்களாவார் கள். குறிப்பாக, பலி நிறைவேற்றப் படும் பீடத்தில் வைக்கப்பட்டுள்ள அருளிக்கங்கள் எந்த அர்ச்சியசிஷ்ட வர்களுடையதோ அவர்களும், யாருடைய திருநாள் கொண்டாடப் படுகிறதோ அவர்களும் அல்லது சிறப்புப் பாதுகாவலராக யார் வணங்கப்படுகிறார்களோ அந்த அர்ச்சியசிஷ்டவர்களே இப்படிக் குறிப்பிடப்படுகிறார்கள். ஆனால் "அவர்களுக்கு மகிமையாகவும், எங்களுக்கு இரட்சண்யமாகவும்" என்ற வார்த்தைகளோடும்; நமது ஒரே மத்தியஸ்தரும், முத்திபேறு பெற்றவர்களை மகிமையில் முடிசூட்டுபவரும், நம்மை முடிவில்லாப் பேரின்பத்திற்கு அழைத்துச் செல்பவருமான "எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்து வழியாக" மன்றாடுவதுமே நற்கருணை வணக்கத்திற்கான நோக்கமாக இருக்கிறது.

**(தொடரும்)**



# நற்கருணையின் பாப்பரசர்

**- அர்ச் பத்தாம் பத்திநாதரின் ஜீவிய சரிதை**

திரு. ஆர்.பி. குழந்தைசாமி, தூத்துக்குடி, 1956

## I - ரியேசில் பிறப்பும் வளர்ப்பும்

**"ஆஸ்திக்காரரானாலும், தரித்திரரானாலும், எப்போதும் அவர்கள் இருதயம் நற்குணமுள்ளதாயும், அவர்கள் முகம் சந்தோஷமாயும் இருக்கும்"** (சர்வப்பிரசங்கி.14:4).

இத்தாலி தேசத்தில் ***ரியேஸ்*** என்ற சிறு கிராமத்தில் ஜியோவானி பப்திஸ்தா சார்த்தோ என்பவர் தனது மனைவி மார்க்கரித்தாவுடன் வாழ்ந்து வந்தார். அவர் அந்த கிராமத்தில் அஞ்சல் அலுவலகத் தலைவராகப் பணி புரிந்து தமது பெரிய குடும்பத்தை நடத்திவந்தார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவரான சூசை மெல்கியோ சார்த்தோ என்பவரே பின்னாளில் புகழ்பெற்ற பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் ஆகத் திகழ்ந்தார். அவரது வாழ்க்கை வரலாற்றையே நாம் இங்கு காண்கிறோம்.

1835-ம் ஆண்டு ஜுன் மாதம் 2-ம் தேதி அன்று ரியேஸ் கிராமத்தில் சூசை மெல்கியோர் சார்த்தோ, பிறந்தார். அஞ்சல் அலுவலகத்தில் அவரது தந்தைக்குக் கிடைத்த மிக சொற்ப வருமானத்தில் வறுமையிலே வளர்ந்தார். தேவ ஆசீர்வாதத்தால் பப்திஸ்தா சார்த்தோவுக்கு இன்னும் பல குழந்தைகள் பிறக்கவே, குடும்பத்தின் பாரத்தைச் சுமப்பது அவரது தந்தைக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆயினும் அவரும் அவருடைய பொறுமையுள்ள மனைவி மார்க்கரித்தாளும் கடவுள் சித்தமே தங்கள் பாக்கியம் என்றுணர்ந்தவர்களாய், தங்களுக்குக் கிடைத்த சொற்பப் பணத்தைக்கொண்டு வாழ்ந்து தங்கள் பிள்ளைகளை புண்ணியத்தில் வளர்ப்பதே தங்களது அலுவலாகக் கொண்டனர். சொற்ப ஊதியத்தில் சில சமயங்களில் உணவின்றி பட்டினியாக இருக்க நேரிட்டது. ஆயினும், தங்கள் பொறுமையுள்ள தாய் தந்தையரைப் போல பிள்ளைகளும் தங்கள் வீட்டின் வறுமை நிலையை உணர்ந்து தங்களுக்குக் கிடைத்த சிறு ரொட்டித்துண்டுகளை உண்டு திருப்தியடைந்தனர். கோடைகாலத்திலும், மழை காலத்திலும் தமக்கிருந்த ஒரே உடுப்பை வெகு பத்திரமாய் வைத்திருந்து, சுத்தமாய் உடுத்திச் சந்தோஷமாயிருப்பர் சார்த்தோவின் பிள்ளைகள். தனது வீட்டு வேலைகளை முடித்தபின் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மார்க்கரித்தாள் அந்தக் கிராமத்தாரின் உடுப்புகளைத் தைத்துக்கொடுத்து, அதன் மூலம் சொற்பப் பணத்தைச் சம்பாதித்துக்கொள்வாள்.

தமது மூத்த மகனான சூசை சார்த்தோவை "பெப்பி" என்று செல்லப் பெயரிட்டுக் கூப்பிடுவார்கள். பெப்பி என்ற வார்த்தைக்கு இத்தாலிய மொழியில் சூசை என்று அர்த்தம். பெப்பி நல்ல பிள்ளைதான், ஆனால் குறும்புக்கு குறைவில்லை என்று அக்கம்பக்கத்தார் சொல்வதுண்டு. பெப்பி வளர்ந்து பின்னாளில் பத்தாம் பத்திநாதர் என்னும் அருமைப் பெயருடன் பாப்புவின் சிம்மாசனத்தில் ஏறியதைக் கேட்ட ரியேஸ் கிராமத்தின் வயோதிகர் ஒருவர் சொல்லுவார்: "பெப்பி பள்ளிக்கூடம் போகும்போது என் தோட்டத்து அத்திமரத்தின்மேல் அவன் கண்ணிருக்கும்; திரும்பி வரும் போது அத்திப்பழம் அவன் வாயிலிருக்கும்; சின்னப்பயல் சும்மாவே இருக்கமாட்டான். ஆனாலும் பிள்ளை சம்மனசு போன்றவன். அவன் முகத்தில் பால்வடியும், பார்ப்பவர் மனமும் குளிரும்" என்று நினைவுகூர்ந்து மகிழ்ந்தார்.

இயல்பிலேயே புத்திக்கூர்மையும், நல்ல ஆரோக்கியமும் உள்ள சிறுவனாகையால் எப்போதும் சுறுசுறுப்பாகவே இங்குமங்கும் ஓடித்திரியவும், பிறர்க்கு உதவி செய்யவும், தன் வயதுள்ள சிறுவருடன் உற்சாகமாய்ப் பேசிக் களிக்கவும் பிரியமுடையவன் பெப்பியென்று கிராம ஆசிரியர் கூறுவார். பெப்பி சிறு வயதில் கொஞ்சம் துடுக்கான பிள்ளையாகவும், முக்கோபக்காரனாகவும் இருந்தானென்று தெரிய வருகிறது. ஆனால், தன் முன்கோபத்தையும், துடுக்குத்தனத்தையும் இளமையிலேயே கண்டறிந்து, அவற்றை முற்றிலும் அடக்கி, பிற்காலத்தில் வெகு சாந்தமுடையவனாகவும் , சமாதானத்தை விரும்புபவனாகவும் திகழ்ந்தான்.

சிறுசிறு குறும்புகள் ஒருபுறமிருக்க, பெப்பி சிறு பிராயம்

முதல் திவ்விய பலிபூசைக்கு உதவி செய்வதில் மிகுந்த ஆசை உள்ளவனாக இருந்தான். கிராமத்துச் சிறு கோவிலில் பூசைக்கு வெகு நேரத்துக்கு முன்பே போய்க் காத்திருந்து, பூசைக்குதவி செய்துவருவான். இதைக் கண்ட அவ்வூர் பங்கு சுவாமியார் பெப்பி மேல் பிரியங்கொண்டு, அக்கோவிலில் பலிபீட பரிசாரகர் சபைக்கு பெப்பியைத் தலைவனாக நியமித்தார். சுபாவத்தில் விவேக புத்தியும், வாய்ச்சாதுரியமும், மன மகிழ்ச்சியும் கொண்டிருந்த பெப்பிக்கு சிறுவயதிலேயே மற்றவரையடக்கியாளத் தக்க திறமையுமிருந்தன. ஆகையால் பலிபீட பரிசாரகர் சபையைச் சேர்ந்த துடுக்கான சிறுவர்கள் பெப்பிமுன் தங்கள் சேஷ்டைகளை காட்டாமல் மிகவும் பணிவாய்ப் பயந்து நடந்து, அவனைக் கண்டால் சின்ன பங்கு சுவாமியார் என்று சொல்லி மரியாதை செய்வார்கள்.

தினமும் அல்லது அடிக்கடி திவ்விய பலிபூசைக்கு உதவி செய்யும் சிறுவர்களுக்குத், தாங்களும் ஒருநாள் குருவாகி திவ்விய பலிபூசையை ஒப்புக்கொடுக்கும் பாக்கியம் தங்களுக்குக் கிடைக்கக்கூடுமென்ற எண்ணம் உதிக்காமல் போனதில்லை. பெப்பிக்கும் அவ்வித எண்ணம் மனதில் தோன்றியது. ஆனல் அது வீண் தோற்றமாக சில காலமிருந்து மறைந்துபோகவில்லை. நாள் போகப்போக அவ்வெண்ணம் பெப்பியின் சிறு உள்ளத்தில் நன்றாய் வேரூன்றவே, குருவானவராகி இவ்வுலகில் கடவுளுக்கு ஊழியம் செய்வதே அவர் சித்தமென்று திட்டமாய் மனதில் பதிந்துவிட்டது. பூசைக்குதவி செய்வதும், திவ்விய நற்கருணையை சந்திப்பதும் பெப்பிக்குப் பேரானந்தம். திவ்விய நற்கருணையின் பாப்பரசர் என்ற இனிய பெயர் வகிக்கவேண்டியவருக்குத் தக்க அறிகுறி இதுவேயென்று சொல்லலாம்.

திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் சேசுவை




நேசிக்கும் இருதயம் அவருடைய பரிசுத்த மாதாவை மறக்க முடியுமோ? தேவதாயை எப்போதும் என்னுடைய அம்மா என்றுக் கூப்பிட்டு, குழந்தை தாயிடம் கொஞ்சுவதுபோல் செல்லமாய்ப் பேசி, சந்தோஷமுற்றிருப்பான் பெப்பி. ரியேஸ் கிராமத்திலிருந்து அரை மைல் தூரத்தில் மாதா கோவில் ஒன்று உண்டு. அக்கோவிலுக்குப் பெப்பி அடிக்கடி போய் அமலோற்பவத் தாயின் அழகிய உருவத்தை தரிசித்து, ஜெபித்து வருவது வழக்கம். பிற்காலத்தில் அச்சிறு கோவிலின் ஞாபகம் பெப்பிக்கு வெகு ஆனந்தத்தையும் ஆறுதலையும் கொடுத்ததாம்.

கிராமப் பள்ளிக்கூடத்தில் நன்றாய்ப் படித்து ஞான உபதேசமும் கற்றபின் அக்காலத்து வழக்கத்தின்படி, பதினொரு வயதானபோது பெப்பி புதுநன்மை வாங்கினான். தினமும் திவ்விய பலிபூசைக்கு உதவிசெய்து, திவ்விய நற்கருணை சந்திப்பதில் சந்தோஷங்கொண்ட பெப்பியின் சிறு உள்ளத்தில் குருவானவர் நற்கருணை உட்கொள்ளும்போதும், மற்றவர் களுக்கு அவர் சற்பிரசாதமளிக்கும்போதும், இன்னும் தனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையே என்ற பல உணர்ச்சிகள் பிறந்திருக்கவேண்டும். பின்னாளில் பாப்புவாக சிம்மாசனம் ஏறியபோது, தாம் சிறு பெப்பியாக இருந்த காலத்தில் தன் மனதிலெழும்பிய உணர்ச்சிகளை நினைவுகூர்ந்து, தன்னைப் போல் எத்தனையோ சின்னஞ்சிறுவர் தேவநற்கருணை என்னும் இனிய உணவையருந்த ஆவலுடனிருப்பார்களென்று எண்ணி, பதினொரு வயதில் புதுநன்மை வாங்கும் பழைய ஒழுங்கை நீக்கி, "புத்தி விபரமடைந்தவுடனேயே பாலகரைப் பரம விருந்துண்ண விடுங்கள்" என்று புது ஒழுங்கை ஏற்படுத்தி உலகங்களிக்கச் செய்தார். இந்தப் புது ஒழுங்கின்படியேதான் இப்போது பால்மணமாறாப் பாலகரும் உலக நாட்டங்கள் தங்கள் சிறு ஆன்மாவில் நுழையும் முன்பே கடவுளை உட்கொள்ளும் பாக்கியம் அனுபவிக்கிறார்கள்.

வயதில் வளர வளர பெப்பி படிப்பில் அதிக அக்கறை செலுத்துவதைப் பங்குசுவாமியாரும் அவரது உதவியாளரும் கண்டு மகிழ்ந்தனர். உதவிப் பங்குசுவாமியார் சங். லூயிஸ் என்பவர் தனது தம்பிக்கு லத்தீன் மொழி கற்றுக்கொடுத்தார். பெப்பியின் புத்திக்கூர்மையையும் படிப்பில் உற்சாகத்தையும் கண்ட சங். லூயிஸ் சுவாமி பெப்பிக்கும் லத்தீன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். லத்தீன் மொழியில் சீக்கிரமே பெப்பி வித்தகனாக விளங்குவானென்று அவர் அடிக்கடி சொல்வார். பெப்பியின் புத்திநுட்பத்தைக் கண்ட லூயிஸ் சுவாமியாரும், பங்கு குருவானவரும் காசல்ப்ராங்கோ என்னும் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்துக்குப் பெப்பியை அனுப்புவதே முறையென்று தீர்மானித்தார்கள்.

ரியேஸ் கிராமத்திலிருந்து காசல்ப்ராங்கோ நான்கு மைல் தூரத்திலிருக்கும் ஒரு பட்டிணம். அங்குள்ள பள்ளியில் நமது பெப்பி சேர்க்கப்பட்டான். நான்கு மைல் தூரத்திலுள்ள பள்ளிக்கூடத்திற்கு பெப்பி நாள் தவறாமல் போவான். மழையோ, வெயிலோ, பனியோ, குளிரோவென்றெல்லாம் பார்க்காமல், வீண் சாக்குப்போக்கு சொல்லாமல், வழியில் யாருடனும் பேசி, வேடிக்கைப்பார்த்து நிற்காமல் குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் போய்ச் சேருவான். தந்தையின் சம்பளமோ சொற்பம். வளரும் பிள்ளைகளால் வீட்டில்

செலவும் அதிகம். படிப்புக்கான செலவோ மிகுதி. பதினொரு வயதுள்ள பெப்பி இவைகளைச் நன்கு யோசித்து, தனது தந்தைக்கு இன்னும் அதிகமாகச் செலவு வைத்துத் தொந்தரவு கொடுக்கக்கூடாதென்று எண்ணினான். தனது காலணிகள் சீக்கிரம் கிழிந்து போகாமலிருக்க, வீட்டைவிட்டுக் கொஞ்சம் தூரம் சென்றவுடன் அவைகளைக் கழற்றி, இரண்டையும் ஒன்றாய்க் கட்டித் தோளில் தொங்கவிட்டு, வெறுங்காலாய் நான்கு மைல் நடந்து பள்ளிக்கூடம் செல்வான். பள்ளியருகே வந்தவுடன் திரும்பவும் அவைகளை அணிந்து கொள்வான். பகல் சாப்பாட்டிற்காக பழைய ரொட்டித் துண்டொன்று அவன் பையில் இருக்கும். மத்தியானத்தில் ஜான் பியான்சி என்பவர் வீட்டில் தங்கித் தான் கொண்டு வந்த ரொட்டித் துண்டைத் தின்றுப் பசியாறுவான். சில சமயங்களில் அவ்வீட்டார் பெப்பிக்கு தின்பதற்கு ஏதாவது தின்பண்டம் கொடுப்பார்கள். அதற்கு நன்றியாக பெப்பி அவ்வீட்டுச் சிறுவர்களுக்கு ஞானோபதேசமும், வேறு பாடங்களும் சொல்லிக்கொடுப்பான்..

இப்படியாக, நான்கு வருடங்கள் காசல்ப்ராங்கோ பள்ளிக்கூடத்தில் படித்தான் பெப்பி. கடைசி வருடத்தில் அவனுடைய தம்பியும் அப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கொள்ளவே, அவரது தந்தை கழுதை பூட்டிய சிறு வண்டி ஒன்றை அவர்களுக்குத் ஏற்பாடு செய்துக்கொடுத்தார்.

தினமும், பள்ளிக்கூடம் முடிந்து வந்தபிறகும் வீட்டில் வேலைகள் இருக்கும். வீட்டில் வேலைக்காரர்களை அமர்த்தும் அளவுக்கு தமது பெற்றோருக்கு வருமானம் இல்லை என்பதை உணர்ந்த சிறுவர்கள் இருவரும் தங்களால் கூடியமட்டும் வீட்டிலுள்ள வேலைகளை உற்சாகமாகச் செய்வார்கள். தோட்டத்திலுள்ள மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றவோ, பசுவிற்குப் புல்போடவோ, கோழிகளுக்குத் தீனி வைக்கவோ, தாய்க்கு சமையலறையில் உதவி செய்யவோ, தங்கைகளைத் தாலாட்டித் தூங்க வைக்கவோ, தந்தை அனுப்புமிடத்திற்குச் சென்று காரியங்களைச் சாதித்துவரவோ, எதுவானாலும் சரியென்று எப்போதும் பெப்பி வேலை செய்வதைக்கண்டு தம்பி ஆஞ்சலோவும் அவ்வாறே செய்ய, பெற்றோர் மகிழ்ச்சியடைவார்கள். எவ்விதத்திலும் பெப்பி தனது தம்பி, தங்கைகளுக்கு முன்மாதிரிகையாகவே நடந்துவந்தான்.

படிப்பில் சிறந்த பெப்பி, ஒவ்வொரு வருடமும் தனது வகுப்பில் முதல் மாணவனாக வந்து, நான்காவது வருட கடைசி தேர்வில் எல்லாப் பாடங்களிலும் முதலாவதாகத் தேறினன். பங்கு சுவாமியார் இருவரும் இளைஞன் பெப்பியின் கல்வித்தேர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர். உயர் படிப்பிற்குப் பணம் அவசியமல்லவா? குறைந்த சம்பளத்தில் எட்டுப் பிள்ளைகளுடன் குடும்பத்தை நடத்த சிரமப்படும் அவனது தந்தையால் பெப்பியை பெரிய பள்ளிக்கூடத்திற்கு எப்படி அனுப்ப முடியும்?

அதே சமயம், குருவானவராய் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதே பெப்பியின் தேவ அழைப்பு என்பதை யாவரும் நன்குணர்ந்தனர். குருமடத்துக்குப் பெப்பி போகவேண்டும். அதற்கு அதிகம் செலவாகுமே, என்ன செய்ய? இச்சமயத்தில் பங்கு சுவாமியார் உதவிக்கு வந்தார்.

அக்காலத்தில் வெனிஸ் நகரத்தில் பிதாப்பிதாவாக இருந்தவர் மிக. வந். கர்தினல் ஜாக்கோபோமோனிக்கா ஆண்டகை. இவர் பெப்பி பிறந்து வளர்ந்த ரியேஸ் கிராமத்தைச் சேர்ந்தவர். பெப்பியைப்போலவே ஒரு ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். அவர் பதுவாப் பட்டணத்துக் குருமடத்தில் உபகாரச் சம்பளம் பெற்று கல்வி கற்கச் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் அதிகாரம் பெற்றவர். ரியேஸ் பட்டணத்துப் பங்கு சுவாமியார் குருமடத்து சிரேஷ்டர் மூலமாய் பெப்பியைப்பற்றி மேற்கூறிய கர்தினலிடம் சிபாரிசு செய்தார்.

பெப்பியின் பெற்றோரும் தங்கள் மூத்த மகனின் தேவ அழைப்பைக் குறித்து சர்வேசுரனுக்கு நன்றி செலுத்தி, அதற்குரிய செலவுக்கும் அவரே உதவுவார் என்று நம்பினார்கள். பெப்பியோ அனைத்தையும் சர்வேசுரன் கரத்தில் ஒப்படைத்து கவலையற்றிருந்தான். கடைசியாய் கர்தினலுடைய



**அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்ந்த வீடு. இப்போது இது அருங்காட்சியகமாக உள்ளது**

கடிதம் வந்தது. அவர் தாமே பதுவா பட்டணத்து மேற்றிராணியாருக்கு பெப்பியைப் பற்றி சிபாரிசு கடிதம் எழுதி, அவர் குருமடத்தில் உதவித்தொகைப் பெற்றுப் படிக்கும் மாணவனாக ஏற்றுக்கொள்ளப்படும்படியான ஏற்பாடுகளைச் செய்தார்.

கர்தினலின் கடிதத்தால் பங்குசுவாமியார் மகிழ்ச்சி அடைந்தார் . மகன் குருமடத்துக்குப் போக வழி கிடைத்ததே என்று சர்வேசுரனுக்கு பெற்றோர் நன்றி கூறினர். தங்கள் அண்ணன் பெப்பிக்கு பெரிய அதிர்ஷ்டம் வந்ததே என்று அவனது சகோதரன் ஆஞ்செலோவும், சகோதரிகள் ரோசாள், தெரேசாள், மரியாள், அந்தோனியாள், லூசியாள், அன்னுள் ஆகிய ஏழுபேரும் ஆனந்தமடைந்தனர். பெப்பியோ அளவற்ற மகிழ்ச்சியுடன் தமது பொருட்களை எடுத்து ஓர் வண்டியில் போட்டு பதுவா பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டான். இப்போது பெப்பிக்கு வயது 15. தனது பெற்றோர், சகோதர சகோதரிகளை விட்டுவிட்டு குருமடம் புகுந்தான் பெப்பி சார்த்தோ!

**(அடுத்த இதழில்: பதுவா குருமடத்தில் படிப்பு, குருப்பட்டம்)**



**அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்ந்த வீட்டின் சமையலறை**

## பாரம்பரிய திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்

**பாளையங்கோட்டை**
பரி. தமதிரித்துவ சிற்றாலயம்
(ஞாயிறு காலை 7.30
வாரநாட்கள் – காலை 7.15)
தொடர்பு : 0462 – 2586201

❖ **சிங்கம்பாறை**
அர்ச். அந்தோணியார் சிற்றாலயம்
ஞாயிறு காலை 11.00
தொடர்பு : 0462 – 2586201

❖ **தூத்துக்குடி**
அர்ச். சவேரியார் சிற்றாலயம்
ஞாயிறு காலை 7.00
தொடர்பு : 9486471966

❖ **நாகர்கோவில்**
அர்ச். தோமையார் சிற்றாலயம்
ஞாயிறு காலை 7.30
தொடர்பு : 9486795178

❖ **கிறீஸ்துராஜபுரம்**
கிறீஸ்துராஜா சிற்றாலயம்
ஞாயிறு காலை 11.00
தொடர்பு : 0462 – 2586201

❖ **சென்னை**
அர்ச். அந்தோணியார் சிற்றாலயம்
ஞாயிறு காலை 11.30
தொடர்பு : 9791134344

❖ **ஆர். என். கண்டிகை**
ஜென்ம இராக்கினி ஆலயம்
ஞாயிறு காலை 7.00
தொடர்பு : 0462 – 2586201

❖ **திருச்சி**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
ஞாயிறு காலை 11.00
தொடர்பு : 9486291764

❖ **கோயம்புத்தூர்**
தொடர்பு : 9487102813

❖ **குன்னூர் (ஊட்டி)**
தொடர்பு : 0462 – 2586201

❖ **பெங்களூரு**
தொடர்பு : 09448067670

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை ( பாளையங்கோட்டை )
இல்லக் குருக்கள்: சங். இராபர்ட் புருச்சியானி | சங். கிரகோரி நொரோனா | சங். திரேஷியன் பாபு

# சாம்பிராணித் தூபம்

**அருட்கருவிகள் II**

நன்றி: கத்தோலிக்கக் களஞ்சியம், திருச்சி, 1941

தேவ ஆராதனை முயற்சிகள் ஆடம்பரச் சிறப்புடன் நடைபெறுவதற்குமல்லாமல், அவைகளில் பணிவிடை செய்பவர்களும், அம்முயற்சிகளில் பங்கடைகிற சகலரும் பக்தி பற்றுதலில் அதிகரிக்கும்படியாக சடங்குமுறை ஆசாரங்கள் மிகுந்த பிரயோசனமுள்ளவைகள் என்று திருச்சபை எப்போதும் அங்கீகரித்திருக்கிறது.

யாதாமொரு வேத ஆசாரமுறை அல்லது சடங்கு ஆரம்பத்தில் அஞ்ஞானிகளால் அல்லது யூதரால் அனுசரிக்கப் பட்டது என்கிற ஒரே காரணத்தின்பொருட்டு, அந்த ஆசாரம் அல்லது சடங்குமுறை நாம் அநுசரிக்கத் தக்கதல்லவென்று திருச்சபை விலக்கிவிடுகிறதில்லை. திருச்சபையில் இப்போது வழங்கி வருகிற ஆராதனை ஆசார முயற்சிகளிற் சில மோயீசன் சட்டத்தில் உள்ளவைகள். வேறு சில அஞ்ஞானிகள் அநுசரித்த வைகள். இதனிமித்தம், திருச்சபை விரோதிகள் சிலர் கத்தோலிக்க வேதம் கிறீஸ்தவ அஞ்ஞானம் என்று குறைகூறத் தலைப்பட்டார்கள். இது முழுவதும் தப்பறையானது. ஏனெனில் மனிதன் கடவுளை ஆராதிக்கிற வழிமுறைகளில் அநேக அநுஷ்டா னங்கள், கடவுள் மட்டில் மனிதனுக்குள்ள பக்தி பற்றுதலை வெளியரங்கமாய்க் காட்டுபவைகள் என்கிற அளவில், அவைகள் குற்றமற்றவைகள் என்று திருச்சபை அறிந்து, அவைகளில் சிறந்த சில அநுஷ்டானங்களைத் தனது ஆசாரமுறையில் ஏற்றுக்கொண்டது. அவ்வாறே, தீர்த்தப் பிரயோகம், சுரூபங்கள் அணிவது, சாம்பிராணித் தூபம் ஆராதனையில் உபயோகிப்பது, இவை யாவும் ஏற்கனவே யூதர் அல்லது அஞ்ஞானிகள் அனுசரித்த வைகள்தான். இவைகளெல்லாம் பக்திப் பற்றுதலை மூட்டுவதற்குச் சிறந்த சாதனங்கள். இவைகளை உபயோ கிப்பதில் அஞ்ஞானம் ஒன்றுமில்லை. ஞானமே முழுவதும் பொருந்தியிருக்கிறது.



சாம்பிராணி, ஆசியாவின் சில பாகங்களில் சாம்பிராணி ஜாதி மரங்களில் உண்டாகும் பிசின், இதைப் பொடித்து நெருப்புக் கங்குகளின் மேல் தூவினால், சுகந்தம் வீசும் வெள்ளை நிறமான புகை கிளம்புகிறது. இந்தப் புகைக்குத் தான் தூபம் என்று பெயர்.

பழைய ஆகமங்களில் இதன் பிரயோகத்தைப்பற்றிய குறிப்புகள் அநேகம் உண்டு. தேவ கூடார ஆலயத்தில், காலை மாலை சாம்பிராணி புகைப்பதற்கென்று ஒரு பீடம் ஏற்பட்டிருந்தது. யாத்திராகமத்தில் அதைக் குறித்துச் சொல்லியிருப்பதாவது: சுகந்த வர்க்கங்களையும் சுத்தமான சாம்பிராணியையும் எடுத்துப் பொடித்துத் தூளாக்கிக் கூடாரத்துக்கு முன்பாக வைப்பாயாக. இந்தச் சாம்பிராணித் தூபம் மகா பரிசுத்தமானதென்று உணரக்கடவாய். சங்கீதங் களிலும், இசாயாஸ், ஜெரேமியாஸ், மலக்கியாஸ் தீர்க்கத் தரிசனங்களிலும், அர்ச். ஸ்நாபக அருளப்பரின் தந்தையாகிய சக்கரியாஸ் கண்ட காட்சியை எடுத்துரைக்கிற சுவிசேஷ பாகத்திலும் சாம்பிராணித் தூபத்தைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

அஞ்ஞானிகள் தங்கள் ஆராதனையில் அதை உபயோ கித்தார்கள் என்பதற்கு ஓவிட், விர்ஜில் என்னும் புலவர்கள் அத்தாட்சி கூறுகிறார்கள். அவர்கள் சொல்வது உரோமானருடைய ஆராதனை யைப்பற்றி. அந்த வழக்கம் நமது நாட்டிலிருந்துதான் உரோமானருக்குள் பரவினது என்று சொல்ல நியாயமுண்டு. சூடம், கற்பூரம், இவைகளின் உபயோகம் இக்காலத்திலும் இந்துமத ஆலயங்களில் வெகு சாதாரணம் என்பது நாமே அறிந்த விஷயம். எஜிப்து தேசத்து ஆலயங்களிலும் கல்லறை களிலும் உள்ள சித்திரங்கள், இப்போது நாம் உபயோகிக்கிற தூபக் கலசங்களைப் போன்ற பாத்திரங்களில் சாம்பிராணியைப் புகைத்து அரசருக்குந் தேவர்களுக்குந் தூபங்காட்டி ஆராதனை செலுத்துவதைக் காட்டுகின்றன.

கத்தோலிக்கத் திருச்சபையில் தூபப்பிரயோகம் எக்காலத்தில் ஏற்பாடாயிற்று என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. ஐந்தாம் நூற்றாண்டுக்குமுன் அது பிரயோகிக்கப்பட்டதாகச் சொல்வதற்குத் திட்டமான அத்தாட்சி இல்லை. ஆயினும் பழைய ஆகமங்களில் அதன் பிரயோகம் வெகு சாதாரணமாய் இருந்ததுபற்றி, கத்தோலிக்கத் திருச்சபையிலும் அது பூர்வீக காலந்தொட்டே வழங்கி வந்திருக்கும் என்று சொல்ல நியாய முண்டு. இது உரோமையிலும் ஐரோப்பாவின் மேற்பாகங் களிலும் ஆரம்பிக்கும் முன்னரே, ரஷ்யாவிலும் கீழ்திசை நாடு களிலும் வழங்கிவந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. துவக்கத்தில், பூசையில் சுவிசேஷம் வாசிக்கையில் மாத்திரம் தூபம் பிரயோகித்தார்கள். நாளடைவில், பூசையின் வேறு

பாகங்களிலும் இதர ஆராதனை முயற்சிகளிலும் உபயோகிக்கலானார்கள்.



இக்காலத்தில், திருச்சபையின் ஆடம்பர ஆராதனை முயற்சிகளில் தூபம் காட்டுவது முக்கியமான அம்சங்களில் ஒன்றாய் விளங்குகிறது. இலத்தீன் ரீதிப்பிரகாரம் தனிப்பூசையில் தூபம் உபயோகிப்பதில்லை. ஆடம்பர அல்லது பெரிய பாட்டுப்பூசையில், பிரவேச கீதத்துக்கு *(Introit)* முன்னும், சுவிசேஷ ஆரம்பத்திலும், பாத்திரம் ஒப்புக்கொடுத்த பின்னும், எழுந்தேற்ற சமயத்திலும் உபயோகிக்கப்படுகிறது. மரித்தவர்களுக்காகச் செய்யும் பாட்டுப்பூசையில், மேலே கூறின சமயங்களுள் முதல் இரண்டு வேளைகளிலும் உபயோகிப்பதில்லை. பலி ஒப்புக்கொடுக்கிற குருவானவருக்கும் பணிவிடை செய்கிற உதவிக் குருக்களுக்கும் மரியாதையின் அடையாளமாகத் தூபங்காட்டுவது பாட்டுப்பூசைச் சடங்கில் ஏற்பட்டது. பூசையிலுமின்றி, சுற்றுப்பிரகாரங்கள், ஆசீர்வாதம், மரித்தோர் அடக்கச் சடங்கு முதலியவைகளிலும் தூபம் உபயோகிக்கிறார்கள். ஆட்களுக்கு மாத்திரமல்ல, அருளிக்கங்கள், சுரூபங்கள், படங்கள் முதலியவைகளுக்கும் தூபங் காட்டுவது உண்டு. சில பொருட்களை மந்திரிக்கையிலும் தூபம் உபயோகப்படுகிறது.

தூபங்காட்டுவதின் கருத்து என்ன? இது எளிதில் கண்டுபிடிக்கக்கூடியதே. சாம்பிராணி எரிவது, விசுவாசிகளிடம் இருக்கவேண்டிய பற்றுதலுக்கும், அதிலிருந்து கிளம்பும் சுகந்த வாசனை கிறிஸ்தவ புண்ணியத்தின் நறுமணத்திற்கும், மேலே எழும்பும் புகையானது, சர்வேசுரனுடைய சந்நிதானத்துக்கு ஏறிச் செல்லுகிற நமது ஜெபத்துக்கும் அடையாளமாம். அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் சொல்லியிருப்பது போல், அர்ச் சியசிஷ்டவர்களின் ஜெபமாகிய தூபப்புகை சம்மனசுவின் கரத்திலிருந்து சர்வேசுரனுக்கு முன்பாக ஏறிச் சென்றது. தூபங்காட்டுவது மரியாதை வணக்கத்தின் அறிகுறி என்பதே பொதுக் கருத்து.

ஆகையால் வெளிச் சிறப்புக்கும் பக்தி பற்றுதலை எழுப்புவதற்கும் சாம்பிராணித் தூபம் சிறந்த சாதனம் என்பதற்குச் சந்தேகமில்லை.

**ஆண்டவரே என் விண்ணபம் தீபத்தூபமாகவும், என் கைகளை ஏந்துதல்**
**அந்திப் பலியாகவும் உமது சமுகத்தில் ஏறக்கடவது (சங். 140:2)**

## உலகின் மிகப்பெரிய தூபக்கலசம் !

**ஸ்பெயின் நாட்டிலுள்ள சந்தியாகு டி கம்போஸ்டலா (Santiago De Compostela) பேராலயத்தில் உள்ளது போட்டாபியுமெய்ரோ தூபக்கலசம். இதுதான் உலகிலுள்ள தூபக்கலசங்களில் மிகவும் பெரியது. இது 80 கிலோ எடையும், 1.6 மீட்டர் (5¼ அடி) உயரமும் உள்ளது. இது 11-ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது. இத்தூபக்கலசம் 1851-ல் பொருத்தப்பட்டது. இது 2006-ல் புதுமெருகேற்றப்பட்டது.**






# உரோமையின் முக்கிய பேராலயங்கள் - III


## தேவ அன்னை பேராலயம்
## (Basilica of St. Mary Major)



பேராலயத்தின் முன்புறத் தோற்றம்



பேராலயம் எங்கு கட்டப்படவேண்டும் என்று புதுமையாக வெளிப்படுத்தப்பட்ட காட்சி



சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ் வரைந்த தேவமாதாவின் ஓவியம்



பாலன் சேசுவைக் கிடத்தி வைத்திருந்த முன்னிட்டி பிரதான பீடத்தின் கீழே வைக்கப்பட்டிருக்கிறது



ஓவியம் வைக்கப்பட்டுள்ள பீடம்



தேவ அன்னை பேராலயத்தின் பின்புறத் தோற்றம்

# தேவ அன்னை பேராலயம்

தேவ அன்னையின் பெரிய தேவாலயம் என்று அழைக்கப்படும் இப்பேராலயம், உரோமையிலுள்ள நான்கு தேவாலயங்களில் ஒன்றாகும். பாப்பரசரின் நேரடி ஆளுகையின் கீழ் உள்ளதால் இது பாப்பரசரின் பேராலயங்களில் (Basilica Papale) ஒன்றாகக் கருதப்படுகிறது. இத்தேவாலயம் கட்டும் இடத்தை புதுமையாக பனியால் வரைந்து, அதே இடத்தில் கட்டப்பட்டதால் இதனை 'பனிமய மாதா தேவாலயம்' என்றும் அழைப்பர். பாலன் சேசு கிடத்தப்பட்ட உண்மையான முன்னிட்டி பெத்லகேம் நகரிலிருந்து கொண்டுவரப்பட்டு இப்பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அர்ச். ஜெரோம், அர்ச். 5-ம் பத்திநாதர் போன்ற பல அர்ச்சியசிஷ்டவர்களின் கல்லறை இங்கு அமைந்துள்ளது.

# செய்திகள்

## பூகம்பத்தால் தேவாலயம் இடிந்தது !




பொலோஞ்ஞா (இத்தாலி) – வட இத்தாலியில் ரிக்டர் அளவில் 6.0 என்று பதிவாகிய பூகம்பத்தால் ஒரு கோயில் அழிந்தது. வீடுகளை இழந்த 5000 மக்களுக்கு உதவிடும் பணியில் திருச்சபை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த மே 20-ம் தேதி அர்ச். இராயப்பர் சதுக்கத்தில் கூடிய மக்களுடன் “பரலோகத்துக்கு இராக்கினியே மனங்களிகூறும்” என்று ஜெபித்த பரி.தந்தை 16-ம் ஆசீர்வாதப்பர், இந்த பேரிடரில் பாதிக்கப்பட்டோருடன் தான் மனதால் ஒன்றுபட்டிருப்பதாக கூறினார். 2009-ல் மத்திய இத்தாலியில் 300 பேரைக் கொன்ற எல் அக்குயில்லா பூகம்பத்திற்குப் பின் வந்த ஒரு பெரிய இடர் இது.

## 600-ம் ஆண்டு விழா !




அர்ச். ஜோன் ஆஃப் ஆர்க் (6.1.1412 – 30.5.1431) பிறந்த 600-ம் ஆண்டு விழாவினை சிறப்பிக்கும் முகமாக இவ்வாண்டு மே 11-ம் தேதி பிரான்ஸ் நாட்டுடன் சேர்ந்து வத்திக்கான் 8 விதமான அஞ்சல் தலைகளை வெளியிட்டது. அர்ச். ஜோன் ஆஃப் ஆர்க் இறந்த 20 ஆண்டுகளுக்குப்பின் வரையப்பட்டு இன்று பாரீஸ் தேசிய மையத்தில் பராமரிக்கப்பட்டுவரும் படங்களை இந்த அஞ்சல் தலைகள் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் 16 லட்சம் அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வீர மங்கைக்கு 1909-ல் பரி. பத்தாம் பத்திநாதர் முத்திபேறு பட்டமும் 1920-ல் 15-ம் ஆசீர்வாதப்பர் அர்ச்சியசிஷ்டப் பட்டமும் கொடுத்தனர். 1922-ல் பரி. தந்தை 11-ம் பத்திநாதர் இவளை பிரான்ஸ் நாட்டின் 2-ம் பாதுகாவலராக அறிவித்தார்.

## “எந்நாளும் ஆண்டவர் திருச்சபையைக் காப்பார்”



தற்சமயம் வத்திக்கானில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிக்கல்களைக் குறித்து பரி. தந்தை முதன்முறையாக பகிரங்கமாகப் பேசினார். “ஆட்சிமன்றத்தில் அண்மையில் நடைபெறும் நிகழ்ச்சிகளாலும் என் உடன் உழைப்பாளர்களாலும் நான் மிகுந்த வேதனையை அனுபவிக்கிறேன். ஆனாலும், மனித பலவீனத்தின் மத்தியிலும், சிரமங்கள் மத்தியிலும், சோதனைகள் மத்தியிலும் திருச்சபையினை இஸ்பிரீத்துசாந்துவானவர் வழிநடத்துகிறார் என்ற உறுதியான எண்ணத்தில் நான் இருக்கிறேன். திருச்சபை தன் பயணத்தைத் தொடர அனைத்து உதவிகளையும் ஆண்டவர் செய்வார்” என்றார் பரிசுத்த தந்தை.




# தேவ அழைத்தல் குறித்தான புதிய புத்தகம் !

*தேவ அழைத்தல் என்றால் என்ன?*
*எனக்கு தேவ அழைத்தல் இருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் சிறிய புத்தகம். ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டியது!*

விலை ரூ. 30/- மட்டும்.

தேவைக்கு கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்

**Sancta Maria Publications,** 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: **8903007345**; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com